# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 13 சோபகிருது வருடம், ஆனி மாதம் 25ஆம் திகதி திங்கட்கிழமை
(10.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 21, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## லொத்தர் விற்பனையில் 65 வீத சரிவு



கே. சுபானி

அதிர்ஷ்டலாபச் சீட்டுகளின் விற்பனை 65 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக அதன் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

02 பக்கம்

## பொலிஸ்மா அதிபருக்கு சேவைக்காலம் மேலும் நீடிப்பு



பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் சேவைக்காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் பரிந்துரைக்கமைய நேற்றுமுதல் விக்கிரமரத்னவின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

# புதிய வரிகள் விரைவில்!

## சொத்து, காணி, நிதித்துறைகளில் புதிய அறவீடு

நமது நிருபர்

அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் புதிதாக வரிகள் சிலவற்றை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க உயர்மட்டத் தகவல்கள் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (09) தெரிவித்தன.

அதன் பிரகாரம் சொத்து, காணி, நிதி ஆகியவற்றுக்கு முதற்கட்டமாக வரி அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பெறுமதி சேர் வரி விலக்களிக்கப்பட்ட பொருட்களுக்கு மீண்டும் அந்த வரியை அமுல்படுத்துவது தொடர்பிலும் அரச தரப்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கத்தின் செலவினத்தைக் குறைத்து வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரமே புதிய வரிகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துக்கு அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகளின் பிரகாரம் கடந்த வாரம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. அதனடிப்படையில் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை கடந்த 1ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன் பின்னர் வங்கிகளின் வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதாக நிதி அமைச்சு அறிவித்தது. நாணய சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் வட்டி குறைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே புதிய வரிகளை அறிமுகப்படுத்துவதற்கு அரச தரப்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வரி அமுலுக்கு வரும்போது வெற்று நிலங்கள், சொத்துகளை வைத்திருப்போர் அதற்காக அதிகபட்ச வீத வரியை செலுத்தவேண்டி வருமென அறியமுடிகின்றது.

## இந்திய வெளியுறவு செயலர் வினய் கொழும்பு வருகிறார்



இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் மோகன் க்வாட்ரா இவ்வார முற்பகுதியில் கொழும்பு வருகிறார்.

கொழும்பில் ஜனாதிபதி ரணில் உட்பட அரசியல் உயர்மட்ட பிரதிநிதிகளை வினய் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணம் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அது குறித்தான முன்னேற்பாடுகளை செய்வதற்காக செயலர் வினய் கொழும்பு வருவதாக அறியமுடிந்தது.

02 பக்கம்

## பெசிலே மிகப்பெரிய திருடன்



### களனியில் மேர்வின் ஆவேசம்

பெசில் ராஜபக்ஷ தான் இந்த நாட்டில் மிகப் பெரிய திருடன் எனக் குற்றம் சுமத்தியுள்ள முன்னாள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா, கொள்ளையடிப்பதற்காகவே ராஜபக்ஷக்கள் தலைமையில் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

02 பக்கம்

## ஜனாதிபதி ரணில் கருணா சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் நோக்கில் கடந்த சில நாட்களாக பல்வேறு... 02 பக்கம்

## ஆண்களிடையே வேகமாக பரவும் எயிட்ஸ் நோய்

### சுகாதாரத்துறை எச்சரிக்கை



நாட்டில் ஆண்களிடையே எயிட்ஸ் நோய் மிக வேகமாகப் பரவிவருவதாகவும் அண்மைக்கால புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பெண்களுடன் ஒப்பிடும்போது ஆண்கள் மத்தியில் எச்.ஐ.வி. பாதிப்பு ஏழு மடங்காக உயர்வடைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் நோய், எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டத்தின் பணிப்பாளர், வைத்தியர் ஜானகி விதாரனபத்திரண இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## யாழ்தேவி ரயில் அசுர வேகத்தில் பரீட்சார்த்த பயணம்




03பக்கம்

## தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் பாரதப் பிரதமர் மோடிக்கு கடிதம்

### ரணிலுடனான சந்திப்புக்கு முன்னர் அனுப்புவதற்கு தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

யாழ். செய்தியாளர்

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை மற்றும் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றிய நிலைமைகள் தொடர்பில் உள்ளடக்கிய ஆவணத்தை பங்காளிக்கட்சிகளுடன் இணைந்து பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

பாரதப் பிரதமர் மோடியுடனான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சந்திப்புக்கு முன்னர் இந்தக் கடிதத்தை அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில்... 02 பக்கம்

## உஷ்




பொலிஸ் மா அதிபர் சந்தனவுக்கு மேலும் 03 மாதகால சேவை நீடிப்பை ஜனாதிபதி வழங்கியிருப்பது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ளதாம்.

தேசபந்துவுக்கு பொலிஸ் மா அதிபர் பதவி கிடைக்கவேண்டுமென விரும்பிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதற்காக பல தடவை ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்தது. ஆனால் அதனை ஜனாதிபதி கண்டுகொள்ளாததால் பெரும் கோபத்தில் இருக்கின்றனராம் பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள்.

## கிளிநொச்சி வைத்தியசாலையில் நான்கு குழந்தைகள் உயிரிழப்பு

### காரணம் வெளியிடப்படாமை குறித்து சுகாதார நிபுணர்கள் அதிருப்தி




கே. சுபானி

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நான்கு குழந்தைகள் உயிரிழந்துள்ள போதிலும் அதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இவ்வாறு பல்வேறு வைத்தியசாலைகளில் குழந்தை மரணங்கள் இடம்பெறுகின்றன. எனினும், அதற்கான முறையான பரிசோதனை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை என சுகாதார நிபுணர்களின் தேசிய இயக்கத்தின் முக்கியஸ்தர், வைத்தியர் சமல் சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## 'அஸ்வெசும' திட்டத்துக்கான ஆட்சேபனைக் காலம் நிறைவு

'அஸ்வெசும' நலன்புரித் திட்டம் தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் இன்றுடன் (10) நிறைவடைகின்றது.

இதுவரை 08 இலட்சத்து 35 ஆயிரம் மேன்முறையீடுகளும் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஆட்சேபனைகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை இன்று பிற்பகலுக்கு முன்னர் பிரதேச செயலாளர்களிடம் சமர்ப்பிக்குமாறு இராஜாங்க அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான புதிய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் மீண்டும் கோரப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## கமெண்ட் கந்தர்...



கக்கூஸ் போறதுக்கு கூட டெக்ஸ் அடிச்சாலும் அடிப்பாங்க என்னங்கோ..!




# அரசாங்கத்துக்கு எதிராக நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்







எம்.இஸட்.ஷாஜஹான்

நீர்கொழும்பு மக்கள் சபை அமைப்பு ஏற்பாடு செய்த அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நீர்கொழும்பு, தெல்வத்தை சந்தியில் இடம்பெற்றது .

ஐ.எம். எப். இன் நிபந்தனைகளுக்கு இணங்கி வரியை அதிகரித்து, சமுர்த்தி கொடுப்பனவில் கை வைத்து மக்கள் மீது சுமைகளை அதிகரித்துள்ள அரசாங்கத்துக்கு எதிராகவே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு முன்பதாக மக்கள் அதிகாரத்துக்காக மக்கள் பேரவைகளை உருவாக்குவோம் என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுர விநியோகமும் நகரில் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததோடு எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர்.

# பூண்டுலோயாவில் பஸ் விபத்து: 12 பேர் வைத்தியசாலையில் அனுமதி





தலவாக்கலை செய்தியாளர்

வட்டகொடையிலிருந்து மடக்கும்புர நோக்கி பயணித்த தனியார் பஸ் நேற்று (09) மாலை துனுகெதெனிய, கிரிடிகெட்டிய பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் சுமார் 12 பேர் காயமடைந்துள்ளதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து இடம்பெற்றபோது பஸ்ஸில் சுமார் 25 பேர் பயணித்துள்ளதுடன், இதில் காயமடைந்த 12 பேர் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெஹேன பிரதேசத்திலிருந்து வட்ட கொடை தோட்டத்துக்கு தேயிலைக் கொழுந்து பறிப்பதற்காக நேற்றுக் காலை தொழிலாளர்களை ஏற்றி வந்த பஸ் மீண்டும் மாலைவேளை தொழிலாளர்களை வெஹேன பிரதேசத்துக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பஸ் பலத்த சேதமடைந்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெரும் நட்டத்தில் இயங்கும் மத்தல விமான நிலையம்

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் கடந்த 2022 ஆண்டில் செயற்பாட்டுச் செலவு இரண்டாயிரத்து 33 மில்லியன் ரூபாவென தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த செலவினமானது வருமானத்தை விட 26 மடங்கு உயர்வானதென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 ஆண்டு அந்த விமான நிலையத்தின் இழப்பு 22 ஆயிரத்து 214 மில்லியன் ரூபாவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார தாக்கத்தின் காரணமாக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையும் இதற்குக் காரணமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.இதேவேளை கடந்த 2017 ஆம் ஆண்டுமுதல் 2022 வரையான காலப்பகுதியில் 42 ஆயிரத்து 818 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர்களின்...

நேற்றுமுன்தினம் (08) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே பிரதமர் மோடியை சந்திப்பதற்காக டெல்லி செல்லவுள்ளார்.

இந்நிலையில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை, இன விடுதலைக்கான தீர்வுகள் மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் நிலைமைகள் தயார் செய்துள்ளன.

அந்தக் கடிதம் தொடர்பில் எமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடியுள்ளோம்.அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின்





அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் தொடர்பில் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் வழங்கும் வகையில் இந்திய பிரதமருக்கு சக தமிழ்க் கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றை பார்வைக்காக அனுப்பப்பட்டுள்ள நிலையில் கடிதம் திரும்பி வந்ததும் கட்டாயம் அந்த கடிதம் அனுப்பப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு ஆடுகள்

## விசேட வேலைத்திட்டம் நேற்று ஆரம்பம்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் அந்த குடும்பங்களுக்கு ஆடுகளை விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை விவசாய அமைச்சு ஆரம்பித்துள்ளது.

ஐந்து வருடங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இவ்வாறு 70,000 ஆடுகள் விநியோகிக்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் பங்கேற்புடன் ரன்ன, வடிகல பிரதேசத்தில் இந்த வேலைத்திட்டம் நேற்று (09) ஆரம்பமானது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் மூன்று ஆடுகள் வீதம் வழங்கப்படும் நிலையில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 07 விவசாய தொழில்முனைவோர் கிராமங்களில் தலா 10 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆடுகள் விநியோகிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## இந்திய வெளியுறவு...

ஜனாதிபதியாக பதவியேற்று சரியாக ஒரு வருடத்தின் பின்னர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டெல்லியில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இதற்கான விசேட ஏற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல் குறித்து ஏற்கனவே இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதற்கமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளார்.

இதன்போது இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இலங்கையின் பெரும் பொருளாதார – அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜனாதிபதியாக பதவியேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் விஜயம் இது என்பதுடன், ஜனாதிபதியாக பதவியேற்று எதிர்வரும் 21ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இந்நிலையில், அன்றைய தினத்திலேயே பிரதமர் மோடியையும் ஜனாதிபதி ரணில் டெல்லியில் சந்திக்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் அவர் விஜயம் செய்யும் ஆறாவது நாடாக இந்தியா உள்ளது. இதுவரை இங்கிலாந்து, பிலிப்பைன்ஸ், எகிப்து, சிங்கப்பூர், பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய 6 நாடுகளுக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் ஒக்டோபரில் ரணில் சீனா செல்லவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆண்களிடையே...

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 25 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2022 ஆம் ஆண்டு 607 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளங்காணப் பட்டுள்ளனர். அவ்வாண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளங்காணப்படும் வீதம் 44 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்களுக்கிடையேயான ஓரினச் சேர்க்கையும் எயிட்ஸ் நோய்ப் பரவலுக்கு முக்கிய காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


# வெளிவந்துவிட்டது!

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை
விசேட மாதிரி வினாத்தாள் தொகுப்பு




பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு...

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
076139305 / 0741684643
0761393805


## லொத்தர்...

அதிர்ஷ்டலாபச் சீட்டுகளின் விலையை இரு மடங்காக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

ஏற்கனவே 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட்ட லொத்தர் சீட்டுகள் 40 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் அவற்றின் விற்பனையில் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளாந்த விற்பனை குறைவடைந்துள்ளதால் வருமானமிழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள லொத்தர் சீட்டு விற்பனையாளர்கள் இதுவிடயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கைவிடுத்துள்ளனர்.

## பெசிலே...

களனியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேர்வின் சில்வா அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பெசில் ராஜபக்ஷ எங்களுடைய வீட்டில் தான் ஆரம்பகாலத்தில் இருந்தார். அவர் நேர்மையானவராக இருந்திருந்தால் நாட்டை விட்டு பின்கதவால் வெளியேறியிருக்க மாட்டார். கோட்டாபய செய்த தவறுகளுக்கான கர்ம வினையை அனுபவிக்கிறார். அவருக்கு வெளிநாட்டுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மீது எனக்கு மரியாதை உண்டு. ஆனாலும் அவரும் குடும்ப ஆட்சியை முன்னெடுக்கவே விரும்பினார்.

அமெரிக்காவில் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கார் விற்பனை நிலையங்களிலும் தொழில்செய்து வந்தவர்தான் பெசில் ராஜபக்ஷ. இப்போது ஏராளமான இடங்களில் வீடுகள் உண்டு. ஏராளமான வெளிநாட்டுப் பணத்துக்கு சொந்தக்காரராக மாறியுள்ளார்.

பொதுமக்களின் சொத்துகளை அவர்கள் பறித்துக்கொண்டார்கள். இவர்கள் அடுத்த ஜென்மத்தில் நாய்களாகவும் பூனைகளாகவும் காகங்களாகவும் பிறப்பார்கள். அதனாலேயே பெசிலுக்கு இந்த ஜென்மத்தில் காகம் எனப் பெயர் வைத்தார்கள் என்றார்.

## ஜனாதிபதி ரணில்...

தரப்பினரையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடி வரும் நிலையில், குறித்த விடயம் தொடர்பில் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனை கடந்த வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து பல மணிநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய போது நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதன் ஊடாக நாட்டு மக்களது பொருளாதார சுமையை குறைக்க தனது பூரண ஒத்துழைப்பை ஜனாதிபதிக்கு வழங்க தான் தயாராக இருப்பதாக, ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக சந்திப்பின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் வாரத்தின் முதல் சில நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன்,முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு ஜனாதிபதியினால் பொறுப்பு வாய்ந்த பதவியொன்று விரைவில் வழங்கப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிளிநொச்சி..

இந்நிலை தொடருமாயின் குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார் உள்ளிட்டோர் மரணிக்கக் கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து வைத்தியர் சமல் சஞ்ஜீவ மேலும் தெரிவிக்கையில்,

நாடு சுகாதாரத் துறையில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டுள்ளது. மேலும் மருந்துத் தட்டுப்பாடு, தரமற்ற மருந்துப் பாவனை மற்றும் அதிகளவான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை உள்ளிட்ட காரணங்களால் நோயாளர்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் கிளிநொச்சி பகுதியில் நான்கு சிசு மரணங்கள் சம்பவித்துள்ளன. எனினும் இம்மரணங்களுக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.

தடை செய்யப்பட்ட மருந்துகளை பயன்படுத்தியதால் பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் இரு மரணங்கள் சம்பவித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் நிபுணர் குழுவின் தலைவர் ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறித்த மருந்துகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை நிராகரித்த காரணத்தினாலேயே மரணங்கள் சம்பவித்துள்ளன.

இதேவேளை, பேராதனை போதனா வைத்தியசாலையில் இருவர் உயிரிழந்தபோது அந்த மருந்தினை தடை செய்ய முடிந்தது. அந்த மருந்துகளை தடைசெய்தமையாலேயே அதற்கு அடுத்த மரணங்கள் பதிவாகாமல் தடுக்க முடிந்தது.

இவ்வாறு காரணங்கள் கண்டறியப்பட்டிருப்பின் மேற்படி அப்பாவிகளின் உயிர்களை காப்பாற்றியிருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

# டயகம நகரில் மதுபானசாலை: எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்






ஆ.ரமேஸ்

டயகம நகரில் பொது மக்கள் வாழும் பகுதியில் புதிய மதுபானசாலைகளை திறக்க வேண்டாமெனக்கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று (09) முன்னெடுக்கப்பட்டது.

டயகம இலக்கம் 01 தோட்ட இளைஞர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் பாடசாலை மாணவர்கள், சிறார்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

போராட்டக்காரர்கள் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு டயகம பஸ்தரிப்பு நிலையம்வரை ஊர்வலமாக சென்று அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இளைஞர்கள் வீதி நாடகம் மற்றும் பாடல் இசைத்தும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

டயகம நகரில் புதிதாக மதுபானசாலை திறக்கப்படவுள்ள நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்துவரும் பிரதேச மக்கள் அண்மையில் வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவுக்கு பரீட்சார்த்த பயணம் மேற்கொண்ட யாழ்தேவி புகையிரதம்





யாழ்தேவி புகையிரதம் மணிக்கு 100 கிலோமீற்றர் அசுர வேகத்தில் ஒலி எழுப்பியவாறு அனுராதபுரம் புகையிரத நிலையத்திலிருந்து வவுனியா - ஓமந்தை புகையிரத நிலையம் வரை நேற்று (09) காலை பரீட்சார்த்தமாக பயணித்திருந்தது.

இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் இந்திய நிறுவனத்தினால் மஹவ தொடக்கம் ஓமந்தை வரையான புகையிரத பாதையின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், அனுராதபுரம் - ஓமந்தை வரையான புனரமைப்புப் பணிகள் இரண்டு கட்டமாக செயற்படுத்தப்பட்ட நிலையில், வவுனியா - அனுராதபுரம் வரையான 48 கிலோமீற்றர் புகையிரத பாதையும் வவுனியா - ஓமந்தை வரையான 13 கிலோமீற்றர் புகையிரத பாதையும் புனரமைக்கப்பட்டன.

இந்த அபிவிருத்தி செயற்றிட்டத்துக்கு 91.27 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த அபிவிருத்தி செயற்றிட்டம் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து ஒரு மணித்தியாலத்தில் 100 கிலோமீற்றர் வேகத்தில் புகையிரதத்தை இயக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே, பரீட்சார்த்தமாக யாழ்தேவி புகையிரதம் நேற்று பயணித்திருந்தது.

அனுராதபுரம் புகையிரத நிலையத்திலிருந்து காலை 10.23 மணியளவில் பயணத்தை ஆரம்பித்த யாழ்தேவி புகையிரதம், மணிக்கு 80 கிலோமீற்றர் தொடக்கம் 100 கிலோமீற்றர் வேகத்தில் ஓமந்தை புகையிரத நிலையத்தை நோக்கி பயணித்து, மீண்டும் ஓமந்தை புகையிரத நிலையத்திலிருந்து அனுராதபுரம் புகையிரத நிலையம் வரை அதேவேகத்தில் பயணித்திருந்தது.

குறித்த புகையிரதம் பயணத்தை ஆரம்பித்ததிலிருந்து மதவாச்சி, வவுனியா ஆகிய இரு புகையிரத நிலையங்களில் மாத்திரம் தரித்து நின்றது. இப் புகையிரதத்தில் புகையிரத திணைக்கள அதிகாரிகளும் பயணித்திருந்தனர்.

இதேவேளை, புகையிரத பாதை புனரமைப்புப் பணிக்காக கடந்த 6 மாத காலத்துக்கு மேலாக நிறுத்தப்பட்ட காங்கேசன்துறை - கொழும்புக்கான புகையிரத சேவைகள் இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக புகையிரத திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தம்பகல்லையில் கைக்குண்டுகள் மீட்பு

தம்பகல்லை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுமுல்ல பிரதேசத்தில் கடந்த 08ஆம் திகதி இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்க செய்யப்பட்டதாக தம்பகல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

மகந்தனை விவேகராம விகாரைக்கு அருகில் உள்ள விவசாய நிலத்தை இருவர் துப்புரவு செய்து கொண்டிருந்தனர். இதன்போது ஒருவரின் மண்வெட்டியில் பிளாஸ்ரிக் குவளையொன்று சிக்குண்டுள்ளது. அதனை எடுத்து பார்த்தபோது அதற்குள் கைக்குண்டுகள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக காணி உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அவர் தம்பகல்லை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கிணங்க, மொனராகலை நீதவான் நீதிமன்றின் உத்தரவின்பேரில் தம்பகல்லை பொலிஸார் விசேட அதிரடிப்படையினருடன் சம்பவ இடத்துக்குச் சென்று குண்டுகளை மீட்டெடுத்து அதனை செயலிழக்கச் செய்தனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 25ஆம் நாள்**
**திங்கட்கிழமை**

**மேஷம்:** தேவையற்ற அலைச்சல்களால் விரக்தி அடைவீர்கள். உங்கள் பணம், பொருள் நஷ்டமேற்படலாம்.

**ரிஷபம்:** போட்டிப் பந்தயங்களில் திடீர் பண வரவு ஏற்படும் நாள். தொழில் வகையில் சகாக்களின் உதவிகள் கிட்டும்.

**மிதுனம்:** தொழில் வகையில் திட்டமிட்ட காரியத்தை இன்று நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறவுகளால் மகிழ்ச்சி.

**கடகம்:** உடல் உழைப்பு அதிகமாக தேவைப்படும்நாள். எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**சிம்மம்:** திட்டமிட்ட காரியத்தினை நடைமுறைப்படுத்துவதில் பல தடைகளை சந்திப்பீர்கள். எதற்கும் நிதானம் வேண்டும்.

**கன்னி:** உங்கள் பங்குதாரர்களால் அதிக இலாபங்களை அடைவீர்கள். காதலில் வெற்றி வாகை சூடுவீர்கள்.

**துலாம்:** நண்பர்களோடு சந்தோஷமாக விருதுண்ணுவீர்கள். நீண்ட நாள் கடன் இன்று தீரப்போகிறது.

**விருச்சிகம்:** உங்கள் மனக்குறையை மற்றவர்களிடம் கொட்டிவிடுவீர்கள். பிள்ளைகளால் மனக்கவலை அடைவீர்கள்.

**தனுசு:** வீடு வாகனங்களால் சற்று செலவுகள் அல்லது தொல்லைகள் உண்டு. ஆனாலும் குடும்ப சுகம் உண்டு.

**மகரம்:** இன்ப அனுபவங்களால் மன நிம்மதி அடைவீர்கள். எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளிக்குமளவு பணம் இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் நாள். சில முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

**திதி:** அட்டமி பி.ப.6.44 வரை பின் நவமி (தேய்)
**நட்சத்திரம்:** ரேவதி பி.ப.6.59 வரை பின் அஸ்வினி
**யோகம்:** அமிர்த யோகம் பி.ப.6.59 வரை பின் மரண யோகம்
**வார சூலம்:** கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** பி.ப. 11.57– 12.27 மணிவரை
**ராகுகாலம்:** 7.27– 8.57 மணிவரை
**எமகண்டம்:** 10.27– 11.57 மணிவரை
**குளிகை:** 1.27– 2.57 மணிவரை
**சந்திராஷ்டமம்:** சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்:** பூசம், அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** அட்டமி நவமி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# இளம் பிக்குமார் துஷ்பிரயோகம்: விகாராதிபதிக்கு விளக்கமறியல்

கலஹா செய்தியாளர்

இளம் பிக்குமார் மூவரை பல வருடங்களாக துஷ்பிரயோகத்துக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நாவலப்பிட்டி பிரதேச விகாரை ஒன்றின் விகாராதிபதியை எதிர் வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நாவலப்பிட்டி நீதிமன்ற மேலதிக நீதவான் ஹர்ஷனி முனசிங்க உத்தரவிட்டார்.

சிறுவர் பாதுகாப்பு பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைய சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளையடுத்தே குறித்த விகாராதிபதி சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான விகாராதிபதியை சனிக்கிழமை மாலை நீதவான் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நீதவான் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் மூன்று பிக்குமாரை மட்டுமின்றி விகாரையில் இருக்கும் ஏனைய இளம் (சிறுவர்) பிக்குமாரையும் நாவலப்பிட்டி வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

# அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 15 தமிழக மீனவர்கள் கைது

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 15 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்புக்குள் நேற்று அதிகாலை அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இரு படகுகளில் வந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 15 தமிழக மீனவர்களும் அவர்கள் பயன்படுத்திய இரு படகுகளும் காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். விசாரணையின் பின்னர் சந்தேக நபர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.


## வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/**


DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல வாடிக்கையாளர்களுக்குமான அறிவித்தல்

## கைவிடப்பட்ட சொத்துக்கள்

**2022.12.31 இல் உள்ளவாறான கைவிடப்பட்ட சொத்துக்களின் சட்டபூர்வ அறிக்கையிடல்**

வங்கியியல் சட்டத்தின் 72ஆம் பிரிவின் பிரகாரம், வங்கிகளில் வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் பின்வரும் இரண்டு வகையான கணக்குகள்/பொருட்கள் கைவிடப்பட்ட சொத்துக்களில் உள்ளடங்கும்:

- பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு வங்கிக் கணக்கில் எவ்வித செயற்பாடுமின்றி வைக்கப்பட்டிருக்கும் வைப்புக்கள் அல்லது வேறு பணம்.
- வாடகைக் காலம் முடிவடைந்து, வங்கியினால் அது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட்ட பின் மூன்று வருடங்களுக்குள் மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்கத் தவறிய வாடிக்கையாளர்களினால் வங்கியின் பாதுகாப்புப் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள்.

வங்கியியல் சட்டத்தின் 73(i) பிரிவினால் கோரப்பட்டதன் பிரகாரம், கடந்த பத்து ஆண்டுகளாகச் செயலற்றிருந்த கணக்குகள், சமர்ப்பிக்கப்படாதிருந்த கொடுப்பனவுக் கட்டளைகள் மற்றும் வரைவுகளின் விபரச் சுருக்கத்தை நாம் கீழே பட்டியலிட்டுள்ளோம். அவை கைவிடப்பட்ட சொத்துக்களாக இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிடப்பட்டுள்ள கைவிடப்பட்ட சொத்துகளின் மேலதிக விபரங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை. மோசடி நபர்கள் அத்தகைய தகவல்களைப் பயன்படுத்திச் சொத்துகளுக்கு உரிமை கோரக்கூடும் என்பதே அதற்குக் காரணமாகும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கைவிடப்பட்ட சொத்து தனக்குரியது என்று கருதும் வாடிக்கையாளர்கள், www.dfcc.lk/contact-us/ என்ற வலைத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களின் ஊடாக அலுவலக நேரங்களில் வங்கியுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

| கிளையின் பெயர் | அறிவிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| அகலவத்தை | 3 |
| அக்குரஸ்ஸ | 3 |
| அளுத்கம | 6 |
| அம்பலாங்கொடை | 46 |
| அம்பாறை | 40 |
| அனுராதபுரம் | 111 |
| அத்துருகிரிய | 19 |
| அவிசாவளை | 75 |
| பத்தேகம | 1 |
| பதுளை | 96 |
| பதுரெலிய | 8 |
| பண்டாரநாயக்க மாவத்தை | 14 |
| பண்டாரவளை | 84 |
| மட்டக்களப்பு | 66 |
| பெலியத்தை | 1 |
| பிபில | 8 |
| பொரளை | 64 |
| புத்தல | 4 |
| சிலாபம் | 45 |
| நகர அலுவலகம் | 13 |
| தம்புள்ளை | 91 |
| தங்கொட்டுவ | 1 |
| தெனியாய | 41 |
| திக்வெல்ல | 3 |
| எல்பிட்டி | 5 |
| எம்பிலிப்பிட்டி | 44 |
| காலி | 58 |
| கம்பஹா | 53 |
| கம்பளை | 48 |
| கொடகாவெல | 5 |
| ஹக்மன | 9 |
| ஹப்புத்தளை | 5 |

| கிளையின் பெயர் | அறிவிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| தலைமை அலுவலகம் | 10 |
| ஹோமாகம | 10 |
| ஹொரணை | 84 |
| யாழ்ப்பாணம் | 46 |
| கடவத்தை | 28 |
| கதுருவெல | 69 |
| கலவானை | 24 |
| கல்முனை | 5 |
| களுத்துறை | 23 |
| கண்டி | 59 |
| கரந்தெனிய | 8 |
| கட்டுகஸ்தோட்டை | 36 |
| கேகாலை | 27 |
| கெக்கிராவை | 6 |
| கிளிநொச்சி | 52 |
| கிரிபத்கொடை | 51 |
| கொட்டாவை | 47 |
| கோட்டேகொட | 9 |
| குளியாப்பிட்டி | 81 |
| குருநாகல் | 153 |
| மகா ஓய | 7 |
| மஹரகம | 44 |
| மஹியங்கனை | 11 |
| மாலபே | 37 |
| மாரவில | 2 |
| மாத்தளை | 40 |
| மாத்தறை | 61 |
| மெதிரிகிரிய | 6 |
| மொனராகலை | 29 |
| மொரட்டுவை | 19 |
| மொரவக்க | 3 |
| நாவுல | 8 |

| கிளையின் பெயர் | அறிவிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| நாவலை | 20 |
| நாவலப்பிட்டி | 4 |
| நீர்கொழும்பு | 39 |
| நிவித்திகலை | 1 |
| நுகேகொடை | 50 |
| நுவரெலிய | 70 |
| பாணந்துறை | 29 |
| புறக்கோட்டை பீப்பிள்ஸ் பார்க் | 22 |
| பிலியந்தலை | 50 |
| புத்தளம் | 20 |
| ராமநாயக்க மாவத்தை | 44 |
| ரம்புக்கன | 4 |
| இரத்தினபுரி | 59 |
| இரத்தினபுரி சேவை நிலையம் | 9 |
| ரத்தோட்டை | 7 |
| ருவன்வெல்ல | 4 |
| தங்காலை | 1 |
| திருகோணமலை | 41 |
| உகனை | 4 |
| உரகஸ்மங்ஹந்திய | 5 |
| ஊறுபொக்க | 12 |
| வவுனியா | 56 |
| வியாங்கொடை | 10 |
| வரக்காபொல | 5 |
| வத்துகெதர | 4 |
| வத்தளை | 42 |
| வத்தேகம | 1 |
| வெலிகந்தை | 10 |
| வெள்ளவத்தை | 25 |
| வெள்ளவாய | 2 |
| வென்னப்புவ | 8 |

0112 350000 www.dfcc.lk

பிச் ரேட்டிங் A-(lka) தரப்படுத்தலைப் பெற்ற, CBSL உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூலை 10ஆம் திகதி, திங்கட்கிழமை



# நிராயுதபாணிகளை நிர்வாணமாக்குதல்!

நவகமுவ, போமிரிய பிரதேசத்தில் பிக்கு ஒருவருடன் வீடொன்றில் இருந்த தாயும் மகளும் நிர்வாணமாக்கப்பட்டு தாக்கப்படும் காணொளி கடந்த வெள்ளிக்கிழமை இரவு வெளியாகி பல சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. தாய், மகளை நிர்வாணமாக்கி தாக்கி, காணொளியில் பதிவுசெய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 8 பேரும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடுவெல பதில் நீதவான் ஹேமந்த வெத்தசிங்க இந்த உத்தரவை சனிக்கிழமை வழங்கினார். சந்தேகநபர்கள் 8 பேரையும் எதிர்வரும் 12ஆம் திகதி அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், முறைப்பாடு செய்தவருக்கு எதிராக முறைப்பாடு செய்ய தமது தரப்பு விரும்புவதாக நீதவானிடம் தெரிவித்தனர். இந்த முறைப்பாடுகளை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பிக்கு கடந்த காலங்களில் சர்ச்சைக்குள்ளான பிரமுகர். இனவாத ரீதியான சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பி அதில் அரசியல் செய்தவர் என்றெல்லாம் விமர்சனங்கள் உள்ளன. இதேபோன்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட மாகல்கந்தே சுதந்த தேரர் என்பவர் ஜப்பானில் பாலியல் சேஷ்டை செய்துவிட்டு பிடிபட்ட சில தினங்களின் பின்னர் இந்த பிக்கு பெண்களுடன் சிக்கியிருக்கிறார். கடந்த காலங்களில் இவர்கள் நடந்துகொண்ட விதத்தால் அவர்களுக்கு இறைவனின் தண்டனை கிடைத்துள்ளதென்று சமூக ஊடகங்களில் பலரால் விமர்சனமும் முன்வைக்கப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்ட தேரர் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய சட்ட செயற்பாடுகளை, அங்கிருந்த பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நிகழ்வு மூடி மறைத்திருக்கிறது. பிக்கு பெண்களுடன் இருந்தமை உண்மையாக இருக்கலாம். அவர் தவறான செயற்பாடுகளில் ஈடுபட்டதும் உண்மையாக இருக்கலாம். ஆனால், அந்த இடத்திற்கு சென்று பெண்களை நிர்வாணப்படுத்தி அவர்களை ஆடைகளை அணியவிடாமல் செய்வதற்கு யாருக்கு என்ன அதிகாரமிருக்கிறது? அல்லது அப்படி செய்வது மனித நாகரீகம்தானா?அது மட்டுமல்லாமல், சம்பந்தப்பட்ட காணொளி எந்தவித தணிக்கையுமில்லாமல் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டமை மிகப்பெரும் துயரம்.

சுயமாக ஒருவர் தன்னிஷ்டப்படி நிர்வாணமாவதற்கும், பலவந்தமாக அவரை நிர்வாணப்படுத்துவதற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. அந்த பெண்கள் ஆடைகளை அணிய முற்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் அதனை உதறிவிட்ட ஆண்கள் ஆண்மைக்கு வரைவிலக்கணம் கொண்டவர்கள் அல்லர். பாலியல் ரீதியான மனநிலையால் பாதிக்கப்பட்ட கூட்டமே அது.

பிக்குவுடன் இருந்த பெண்களின் ஆடைகள் பலவந்தமாக களையப்பட்டமையை நியாயப்படுத்தி எழுதும் மனக்கிலேசம் கொண்ட சிலரும் சமூகத்தில் இருக்கின்றனர். போர்க்காலங்களில் எமது தமிழ்ச் சகோதரிகள் அப்படி நடத்தப்பட்டார்களே என்று வாதிடுவோரும் உண்டு. அது உண்மைதான். ஆனால், அப்படியான செயற்பாடுகள் மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்டு மனித உரிமைகளை மீறும் செயல் என்றுதானே தமிழ்ச் சமூகம் இன்னமும் குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறது. அப்படிச் செய்ததால் படிந்த கறைகளை கழுவ முடியாமல் தானே இலங்கை இன்னமும் தடுமாறிக்கொண்டிருக்கிறது. அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், இந்த சம்பவத்தை போர்க்களத்துடன் ஒப்பிட்டு, ஆடைகளை களைந்து பெண்களை நிர்வாணமாக பகிரங்கப்படுத்தப்படுவது சரியென கூறுவது எந்த வகையில் நியாயமானது என்பது தெரியவில்லை.

தேரர் பாலியல் ரீதியாக செயற்பட்டார் என்பது ஏற்புடையதல்ல. அது நீதித்துறையால் கையாளப்படவேண்டிய விடயம். ஆனால், அந்த சம்பவத்தில் சிக்கிய பெண்களை நிராயுதபாணிகளாக்கி நிர்வாணப்படுத்துவது என்பது ஏற்புடையதா என்பதை சிந்தித்தல் வேண்டும். கட்டுக்கடங்காமல் செயற்படும் காட்டுமிராண்டித்தனமான சமூக ஊடகங்களின் வகிபாகம் தொடர்பில் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிங்களவர்கள் தமிழர்களுக்கு இப்படி செய்தார்கள். அதனால் அவர்களுக்கு அப்படி நடப்பது நல்லதென எவராவது கூறுவார்களாயின் அது வக்கிர மனம் கூறும் கூற்று. மனித உரிமைகள் என்று வந்தால் அது சிங்களவர், தமிழர்கள் என்று பிரித்துப்பார்க்க முடியாதது. நாய் நம்மை கடித்தது என்றால் நாம் திரும்பி நாயைக் கடிப்பதா?

உடம்பில் ஆடைகளின்றி பெண்களை கதறவிட்டு காணொளிப் பதிவுசெய்து, அதனை சமூக ஊடகங்களில் பரப்பிய அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். தனக்கு வந்தால்தான் தலைவலியும் காய்ச்சலும் தெரியும் என்பதுபோல் இந்தப் பெண்களுக்கு நேர்ந்த அவலம் தங்களது உறவுப்பெண்களுக்கு நடந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதை ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டிய தருணம் இது.

## இன்றைய நாளில்...

* 988 – டப்லின் நகரம் அமைக்கப்பட்டது.
* 1499 – வாஸ்கோடகாமாவுடன் பயணம் செய்து இந்தியாவுக்கான பயண வழியைக் கண்டறிந்த பின்னர், போர்த்துக்கேய நாடுகாண் பயணி நிக்கொலோ கோலியோ லிஸ்பன் திரும்பினார்.
* 1553 – ஜேன் கிரே இங்கிலாந்தின் அரசியாக முடிசூடினார். இவர் 9 நாட்கள் மட்டுமே பதவியில் இருந்தார்.
* 1806 – வேலூர் சிப்பாய் எழுச்சி: தமிழ்நாட்டில் வேலூர்க் கோட்டையில் நிகழ்ந்த எழுச்சியில் பல ஆங்கிலேயப் படையினர் கொல்லப்பட்டனர்.
* 1925 – இந்திய ஆன்மிகத் தலைவர் மெகர் பாபா இறக்கும் வரையான (44 ஆண்டுகள்) மௌன விரதத்தை ஆரம்பித்தார். இந்நாள் அமைதி நாளாக அவரின் பக்தர்களால் நினைவுகூரப்படுகிறது.
* 1947 – முகம்மது அலி ஜின்னா பாகிஸ்தானின் முதலாவது ஆளுநராக பிரித்தானியப் பிரதமர் கிளமெண்ட் அட்லீயினால் பரிந்துரைக்கப்பட்டார்.
* 1962 – உலகின் முதல் தகவல் தொடர்பு செயற்கைக்கோளான டெல்ஸ்டார் விண்ணில் ஏவப்பட்டது.
* 1973 – பங்களாதேஷ் நாட்டை அங்கீகரிக்கும் தீர்மானம் பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
* 1991 – யாழ்ப்பாணம் ஆனையிறவு இராணுவத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் போர் தொடுத்தனர்.

# விளையாட்டும் வியாபாரமாகிறது!

பதின்மூன்றாவது ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் எதிர்வரும் ஒக்டோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் பிரதான சுற்றுக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி தகுதி பெறாமல் போனது பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் விளையாடிய ஒரு நாள் ஆட்டங்களுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில், தரவரிசைக்கு பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஐ.சி.சியின் 'சூப்பர் லீக்'-இல் முதல் எட்டு இடங்களைப் பெற்ற அணிகளான நியூசிலாந்து, இங்கிலாந்து, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் உலகக் கிண்ணப் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன.

பத்து அணிகள் இடம்பெற்றுள்ள இந்தப் போட்டியில் பங்கேற்க உள்ள மற்ற இரண்டு அணிகளைத் தேர்வு செய்வதற்கான தகுதிச் சுற்று சிம்பாப்வேயில் தற்போது நடைபெற்றுவருகிறது. இதில், ஹராரேயில் கடந்த சனிக்கிழமை (ஜூலை 1) நடைபெற்ற சூப்பர் சிக்ஸ் பிரிவு ஆட்டத்தில் அனுபவமற்ற அணியான ஸ்கொட்லாந்து ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வென்று மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதிர்ச்சி அளித்தது. இந்த அதிர்ச்சித் தோல்வியால் உலகக் கிண்ண போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பை மேற்கிந்தியத் தீவுகள் அணி இழந்தது.

1970களில் தொடங்கி கிட்டத்தட்ட 1990 வரை கிரிக்கெட் உலகில் மேற்கிந்தியத் தீவுகள் அணி கொடிகட்டிப் பறந்தது. 1975இல் உலகக் கிண்ணப் போட்டி அறிமுகமானபோதும், அதற்குப் பின்னர் 1979இல் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி வாகை சூடியது.

பின்னர் 1983இலும் அந்த



அணியே கிண்ணத்தை வெல்லும் என்று கணிக்கப்பட்ட நிலையில், கபில்தேவ் தலைமையில் இந்திய அணி எதிர்பாராமல் வெற்றி பெற்று கிரிக்கெட் உலகையே வியப்பில் ஆழ்த்தியது. அதற்குப் பின்னரும், 2004இல் சம்பியன்ஸ் டிராபி கிண்ணம், 2012, 2016இல் இருபதுக்கு 20 உலகக் கிண்ணப் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பட்டம் வென்றது. ஆனால், இப்போது முதன்முறையாக மேற்கிந்தியத் தீவுகள் அணி இல்லாமல் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவுள்ளது.

அந்த அணியின் வீழ்ச்சி திடீரென ஏற்பட்டதல்ல. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஃபிராங்க் வொரல், எவர்டன் வீக்ஸ், கேரி சோபர்ஸ், விவியன் ரிச்சர்ட்ஸ், கிளைவ் லொயிட், கோர்டன் கிரீனிட்ஜ், டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், பிரையன் லாரா, சிவநாராயண் சந்தர்பால் போன்று நிலைத்து நின்று ஆடக்கூடிய துடுப்பட்ட வீரர்கள் இப்போது அந்த அணியில் இல்லை.

மெல்கம் மார்ஷல், மைக்கல் ஹோல்டிங், என்டி ரொபர்ட்ஸ், ஜோயல் கார்னர், கொலின் கிராஃப்ட், கர்ட்லி அம்ப்ரோஸ், கர்ட்னி வோல்ஷ் போன்ற பந்துவீச்சாளர்கள் எதிரணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்மசொப்பனமாக இருந்தனர். ஆனால், இப்போதைய தகுதிச் சுற்றில் நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 374 ஓட்டங்கள் எடுத்தும் அந்த அணியின் பந்துவீச்சாளர்களால் எதிரணியைக் கட்டுப்படுத்த முடியாததால் ஆட்டம் சமநிலை (டை) ஆனது.

மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்தவரை, டெஸ்ட் ஆட்டங்களுக்கு ஐ.பி.எல். போட்டி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக, புகழ்பெற்ற சகலதுறை வீரரான கார்ல் ஹூப்பர் கடந்த 2018ஆம் ஆண்டிலேயே கூறியுள்ளார். இளம் ஆட்டக்காரர்கள், ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்பதையே தங்களது இலட்சியமாகக் கொண்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

அண்மையில் நடந்து முடிந்த ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு விளையாடிய ஷிம்ரன் ஹெட்மயருக்கு ரூ.8.50 கோடியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு விளையாடிய என்ட்ரே ரஸ்ஸலுக்கு ரூ.16 கோடியும் ஊதியமாக வழங்கப்பட்டது. இப்போதைய உலகக் கிண்ண தகுதிச் சுற்று ஆட்டங்களில் இருந்து ஹெட்மயர், ரஸ்ஸல், சுனில் நரைன் போன்றவர்கள் தாங்களாகவே விலகிக் கொண்டுவிட்டனர்.

அதனால், மேற்கிந்தியத் தீவுகளின் ஆட்டக்காரர்கள் நாட்டுக்காக விளையாடுவதைவிட உலகெங்கும் நடைபெறும் 20 ஓவர் போட்டிகளில் பங்கேற்பதையே விரும்புகின்றனர்.

மேற்கிந்தியத் தீவுகளில் பல ஆண்டுகளாகவே ஊதிய ஒப்பந்தம் தொடர்பான பிரச்சினை நிலவிவருகிறது. இதன் காரணமாகவே, கடந்த 2009இல் பங்களாதேஷுக்கு செல்லமாட்டோம் என கிரிக்கெட் வீரர்கள் போர்க்கொடி உயர்த்தினர். அப்போது அனுபவமே இல்லாத ஃபிளாய்ட் ரீஃபெர் தலைமையில் சென்ற அணி டெஸ்ட்களில் 2-0 எனவும், ஒருநாள் ஆட்டங்களில் 3-0 எனவும் படுதோல்வி கண்டது.


அதன் பின்னர், 2014இல் இந்தியாவுக்கு டுவைன் பிராவோ தலைமையில் வந்த அந்த அணி 4ஆவது ஒருநாள் ஆட்டத்துடன் விளையாடுவதை நிறுத்திக்கொள்வதாக அறிவித்தது. அந்த அணி மேலும் ஓர் ஒருநாள் ஆட்டம், ஓர் இருபதுக்கு 20 ஆட்டம், 3 டெஸ்ட்களில் விளையாட இருந்த நிலையில், அத்தொடர் பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) போல நூற்றுக்கணக்கான கோடிகளில் கொழிக்காமல், கடந்த 2020இல் ஆட்ட ஊதியம்கூட வழங்க முடியாத நிலைக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை தள்ளப்பட்டது.

காரணம் எதுவாக இருப்பினும், அதற்கு தீர்வு காணப்பட்டு அந்த அணி தனது பழம்பெருமையை மீட்டெடுக்க வேண்டும் என்பதே உலகெங்குமுள்ள கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும். பணத்துக்காக மட்டுமே விளையாடுவது என்று வீரர்கள் நினைக்கத் தொடங்கினால், அதற்குப் பெயர் விளையாட்டல்ல, வியாபாரம்... இன்னும் சொல்லப்போனால், சூதாட்டம்!

**(நன்றி - தினமணி)**

# பாராட்டத் தயக்கம் ஏன்..?



**பா.போற்றிராஜா**

அண்மையில் ஒருநாள் என் அலுவலக நண்பர் ஒருவரிடம், அவர் போட்டிருந்த சட்டையை சுட்டிக்காட்டி, ''இந்த சட்டை உங்களுக்கு ரொம்ப நல்லா இருக்கு'' என்று இயல்பாகச் சொன்னேன். அவ்வளவுதான், அன்று முழுவதும் அவருடைய நடையில் அதுவரை இல்லாத ஒரு மிடுக்கு இருந்தது. கண்ணாடியில் அவ்வப்போது முன்னும் பின்னும் திரும்பி தன்னை ரசித்துக் கொள்வதையும் என்னால் பார்க்க முடிந்தது.

அன்று மாலை வீட்டுக்குத் கிளம்பும் போது என்னை வந்து சந்தித்தார். அவரின் தோற்றம் குறித்து நான் பாராட்டியது அவரை அன்றைய நாள் முழுவதும் உற்சாகமாக வைத்திருந்ததாக தெரிவித்தார். அன்றைய பணிகளை செம்மையாக செய்ய அந்த உற்சாகம் உதவியதாகவும் கூறினார். நான் அவரிடம் ''அதற்காக தினமும் அதே சட்டையை போட்டுக்கொண்டு வந்து விடாதீர்கள்'' என்று கூறிய போது கலகலவென்று சிரித்துவிட்டு நகர்ந்தார்.

ஒரு சின்ன பாராட்டு ஒருவரை நாள் முழுவதும் துள்ளலோடு வைத்திருக்க முடிந்தது உண்மையில் எனக்கு வியப்பாக இல்லை. காரணம், நாம் அத்தனை பேரும் ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருப்பது ஒரு சின்ன பாராட்டுக்காகத்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

நம் சிறுவயதில் நாம் இயல்பாக செய்த ஒரு செயல் பிறரின் பாராட்டைப் பெறும் போதுதான், அது வெறும் செயல் அல்ல, நமக்குள் ஒளிந்திருக்கும் திறமை என்பது நமக்கு புரிகிறது. அதே திறமை மீண்டும் மெருகேறி வெளிப்படும்போது பாராட்டும் பன்மடங்காகிறது. பாராட்டு பன்மடங்காகிறபோது திறமை இன்னும் பட்டை தீட்டப்பட வேண்டும் என்ற பொறுப்புணர்வு உண்டாகிறது.

ஒருவரின் திறமையை சரியான நேரத்தில் அங்கீகரித்துப் பாராட்டினால் மட்டுமே அவரின் திறமை அடுத்த கட்டத்துக்கு நகர்கிறது. எடுத்துக்காட்டாக, நான் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது, மதுரையில் பாடசாலைகளுக்கு இடையேயான ஒரு பேச்சுப் போட்டி அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள எங்கள் வகுப்பில் உள்ள எல்லோரும் ஆவலாக இருந்தோம்.

ஆனால், ஒரு பாடசாலை சார்பாக ஒவ்வொரு பிரிவிலும் இருவர் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என்பது போட்டி விதி. அந்த இருவரைத் தேர்ந்தெடுக்க என் வரலாற்றாசிரியர், பகத் சிங் பற்றிய ஐந்து வரிகளை எழுதிக் கொடுத்து எங்களைத் தனித்தனியாக வாசிக்கச் சொன்னார். ஒவ்வொருவரும் வாசித்து முடித்த பின்பும் பலத்த கரவொலி எழுப்பச் சொன்னார். அந்தக் கரவொலி பிரதான போட்டியில் பங்கெடுப்பதற்கு முன்பாகவே எனக்கு வெற்றி பெற்ற உணர்வை ஏற்படுத்தியது.

ஒவ்வொருவரையும் தனித்தனியாக அருகில் அழைத்துப் பாராட்டினார். ஒருவனுக்கு குரல் வளம் நன்றாக உள்ளது என்று தட்டிக் கொடுத்தார். இன்னொருவனின் ஏற்ற இறக்கம் பற்றி சிலாகித்துப் பேசினார். அதே போல் எனது தமிழ் உச்சரிப்பு நன்றாக உள்ளது என்றும் பயிற்சி எடுத்தால் என்னால் மேடையில் சிறப்பாகப் பேச முடியும் என்றும் எனக்கு ஊக்கமளித்தார்.

அவரின் உந்துதலால் அந்தப் பேச்சுப் போட்டியில் பங்கெடுத்து என்னால் மூன்றாம் பரிசு வெல்ல முடிந்தது. மூன்றாம் பரிசு வெல்ல முடிந்ததல்ல விடயம். அதன்பிறகு நடைபெற்ற அனைத்துப் பேச்சுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு என்னாலும் சிறப்பாகப் பேச முடியும் என்ற தன்னம்பிக்கையை எனக்களித்தது என் ஆசிரியரின் பாராட்டு மொழிகள்தான் என்பதை நான் எப்படி மறக்க முடியும்?

தமிழ் எழுத்துகளை சரியாக எழுதியதற்காக, ஒன்றாம் வகுப்பு படிக்கும் என் மகளின் தமிழாசிரியர், அவளின் கையில் ஒரு நட்சத்திரம் வரைந்துவிட்டிருக்கிறார். சிவப்பு மையில் வரையப்பட்டிருந்த அந்த நட்சத்திரத்தை அவள் குளிக்கும்போது கூட அழிக்கவிடவில்லை.

இவ்வளவு ஏன், ஒன்றேகால் வயது நிரம்பிய பக்கத்து வீட்டுக் குழந்தை முதன்முறையாக தட்டுத் தடுமாறி என் கட்டிலில் ஏறியபோது நான் ஆரவாரத்துடன் கைதட்டினேன். அதே குழந்தை மறுநாள் மீண்டும் அதே கட்டிலில் ஏறிவிட்டு என்னைப் பார்த்து கைதட்டுங்கள் என்று தனது பிஞ்சுக் கைகளால் சைகை செய்தபோது உண்மையில் நான் மிரண்டு போனேன்.

ஒரு நடிகருக்கோ, எழுத்தாளருக்கோ, இசைக் கலைஞருக்கோ பாராட்டு என்பது மிக முக்கியம். ஏனென்றால், ஒரு நல்ல எழுத்தையோ, நல்ல நடிப்பையோ, நல்ல இசையையோ மக்கள் ரசித்துப் பாராட்டவில்லை என்றால் திறமையான படைப்பாளிகள் துவண்டு போக வாய்ப்புண்டு. தனது படைப்புகளை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல பரீட்சார்த்த முயற்சியில் துணிவோடு இறங்க முடியாமல் ஒரு படைப்பாளியின் கற்பனைச் சிறகுகள் முளையிலேயே முறிந்து போக வாய்ப்புண்டு.

வெறும் பணம் மட்டுமே ஒருவரின் கடின உழைப்புக்கு ஊதியமாகிவிடாது. அவ்வப்போது அவரின் உழைப்பை அங்கீகரிக்கும் வண்ணம் மனதாரப் பாராட்டவும் வேண்டும். ஒருவர் ஒரே வேலையை தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் சிறப்பாக செய்து கொண்டிருக்கும்போது அவ்வப்போது அவர் பாராட்டப்பட வேண்டும். அப்படிப் பாராட்டத் தவறிவிட்டால், ஒரு கட்டத்தில் அவருக்கு அந்த வேலை சலிப்பை ஏற்படுத்திவிடும். அவருடைய பணியில் தொய்வு ஏற்பட்டுவிடும்.

ஒரு உணவகத்தில் சமீபத்தில் பரோட்டா சாப்பிட்டேன். அந்த ருசி பிடித்துப்போக, பரோட்டா மாஸ்டரை அழைத்து மனதாரப் பாராட்டினேன். அவரின் முகம் மலர்ந்தது. நெகிழ்ந்து போனார். நாள் முழுக்க அடுப்பின் அருகில் வியர்க்க விறுவிறுக்க வேலை செய்து கொண்டிருந்த அவருக்கு நான் சொன்ன வார்த்தைகள் கொஞ்சம் இளைப்பாறுதலைத் தந்திருக்கக் கூடும். அந்த உத்வேகத்தில் அடுத்து வருபவர்களுக்கு இன்னும் ருசியாக சமைப்பார் என்ற நம்பிக்கையோடு அங்கிருந்து நகர்ந்தேன்.

பிறரைப் பாராட்டுங்கள். மனம் திறந்து பாராட்டுங்கள். நம்முடைய சின்ன பாராட்டு மொழி ஒருவரின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இன்று வாழ்வில் உயர்ந்து நிற்கும் அத்தனை பெரிய மனிதர்களும் ஒரு காலத்தில் யாரோ ஒருவரால் பாராட்டப்பட்டு, அந்த உந்துதலால் முன்னேறி வந்தவர்கள்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

## நக்கல் நமசிவாயம்

**கோட்டாவை விரட்டி நேற்றோட ஒரு வருஷம்... அன்றைக்கு ரணிலை பைத்தியம் என்று சொன்னவர்கள் இண்டைக்கு ரணிலோட கொஞ்சிக்குலாவுறாங்கள்.. வாழ்க்கை ஒரு வட்டம் எண்டுறது இதைத்தானோ..!**



# வவுனியாவில் போராளிகள் நலன்புரிச் சங்க அலுவலகம்





போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் வவுனியா அலுவலகம் நேற்று (09) வவுனியா, தோணிக்கல் பகுதியில் திறந்துவைக்கப்பட்டது.

முன்னாள் போராளிகளின் நலன் சார்ந்து உருவாக்கப்பட்ட போராளிகள் நலன்புரிச் சங்கமானது மாவட்ட ரீதியில் போராளிகள் அணுகக்கூடிய வகையில் அலுவலகங்களைத் திறக்கவுள்ளது.

இதன் ஓர் அங்கமாக வவுனியா அலுவலகத்தை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் திறந்து வைத்தார்.

இதன்போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் போராளி சிவகுமாரன், விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தியாகதீபம் திலீபன் மற்றும் அன்னைபூபதி ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் அரசியல் கைதியான செ.அரவிந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர், முன்னாள் போராளிகள், எழுத்தாளர் மேழிகுமரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# கொக்குத்தொடுவாய் புதைகுழி ஆய்வாராய்ச்சி பிரதிநிதிகள் முன்பாக மேற்கொள்ளப்பட வேண்டும்

## ரெலோவின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவிப்பு

கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற புதைகுழி ஆய்வாராய்ச்சியானது மனித உரிமைப் பேரவையில் இயற்றப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையில் அதற்கான சாட்சியங்களைத் திரட்டுகின்ற பொறிமுறையின் கீழ் அதன் பிரதிநிதிகள் முன்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற புதைகுழிகள் அகழ்வு ஊடாக பல மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது கடந்த காலத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட வகையிலே யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற பல விடயங்களுக்கு சாட்சியமாக விளங்குகின்றது.



மனித உரிமைப் பேரவையில், மனித உரிமை உயர்ஸ்தானிகராலும் இந்த யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்களுக்கான சாட்சியங்களைப் பதிவுசெய்கின்ற ஒரு பொறிமுறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த அகழ்வாராய்ச்சி என்பது மனித உரிமை உயர்ஸ்தானிகர் அல்லது ஐ.நாவின் வதிவிடப்பிரதிநிதிகள் முன்பாகவும் இந்த சாட்சியங்களுக்கான அலுவலகம் திறக்கப்பட்டு இதற்கான உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பாரிய நிதி ஒதுக்கீட்டையும் ஐ.நா. செய்துள்ளது.

ஆகவே, அவர்களையும் வைத்துக் கொண்டு இந்த அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலமே தோண்டியெடுக்கப்படும் மனிதப் புதைகுழிகளின் விபரங்களை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சரியான முறையில் பதிவு செய்ய முடியும்.

குறிப்பாக, கொக்குத்தொடுவாய் என்பது தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடம் என்பது மட்டுமன்றி, யுத்தத்துக்கு முன்னரே அங்குள்ள தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதும், கிராமங்கள் அழிக்கப்பட்டதும் என்று பல குற்றச்சாட்டுகள் உள்ளன. எனவே, கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற புதைகுழி ஆய்வாராய்ச்சியானது மனித உரிமைப் பேரவையில் இயற்றப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையில் அதற்கான சாட்சியங்களைத் திரட்டுகின்ற பொறிமுறையின் கீழ் அதன் பிரதிநிதிகள் முன்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம்

## புதிய நடைமுறை அறிமுகமென்கிறார் ஆணையாளர்

மாற்றுத்திறனாளிகள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவிக்கையில், மாற்றுத்திறனாளிகள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான புதிய நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர், மோட்டார் போக்குவரத்து தலைமை பரிசோதகர், மருத்துவர் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

தற்போதுள்ள அங்கவீனத்தின் அடிப்படையில் ஏதேனும் வாகனத்தைச் செலுத்தும் சாரதி உரிமத்துக்கு விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளி, அவர் விண்ணப்பித்த வாகனத்தை செலுத்துவதற்கு சரியான உடல் தகுதி கொண்டவரா என்பதை இந்தக் குழு முதற்கட்டமாக பரிசோதனை மேற்கொள்ளும். வாகனத்தின் உதிரிப்பாகங்களை பயன்படுத்துவதற்கு தற்போதுள்ள அங்கவீனம் தடையாக உள்ளதா என்பது குறித்து நடைமுறைச் சோதனை நடத்தப்படும். அவ்வாறான தடை இல்லை என மேற்படி குழு சிபாரிசு செய்தால், குறித்த நபர் சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் சாதாரண முறையின் கீழ் எழுத்து மற்றும் நடைமுறைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். இது தொடர்பாக புதிய சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



உடப்பு ஓம் சக்தி பாலர் பாடசாலையும் ஆண்டிமுனை ஆதவன் பாலர் பாடசாலையும் இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் சந்தை உடப்பு ஆலய முன்பாகவுள்ள பொது இடத்தில் நேற்று(09)மாலை இடம்பெற்றது.

படப்பிடிப்பு: உடப்பு செய்தியாளர்

# தனியார் மருத்துவ நிலையத்தில் நாய்க்கு குருதிப் பரிசோதனை

## மன்னிப்புக் கோரியதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு

வவுனியாவில் தனியார் மருத்துவப் பரிசோதனை நிலையமொன்றில் நாய்க்கு குருதிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதற்கு குறித்த தனியார் மருத்துவ நிலைய உரிமையாளர் மன்னிப்புக் கோரியுள்ளதாக வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.



குறித்த தனியார் மருத்துவ நிலையத்தை தனது வைத்திய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் ஒருவர் குறித்த வைத்தியசாலையில் நாய்க்கு இரத்தப் பரிசோதனை மேற்கொண்டுள்ளதாக ஆதாரத்துடன் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எம்.மகேந்திரன் மற்றும் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியோருக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

விலங்குகளுக்கென தனியான வைத்தியர்கள் மற்றும் வைத்திய பரிசோதனை நிலையங்கள் உள்ளநிலையில், மக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளும் தனியார் மருத்து நிலையம் ஒன்று இவ்வாறு நடந்து கொண்டமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக முறைப்பாட்டாளர் தெரிவித்திருந்ததுடன், குறித்த சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் எழுத்து மூலம் பதில் வழங்கிய வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் எம்.மகேந்திரன், குறித்த முறைப்பாடு தொடர்பாக எமது பணிமனையினால் ஆய்வு கூட உரிமையாளரிடம் விளக்கம் கோரி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. அவரினால் எமக்கு பதில் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன், அக்கடிதத்தில் தான் இனிமேல் அத்தகைய தவறைப் புரியமாட்டேன் என மன்னிப்பும் கோரியுள்ளார் என தங்களுக்கு அறியத் தருகின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடமாகாண சுகதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி வழங்கிய எழுத்து மூல பதிலில்,

குறித்த விடயம் தொடர்பில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த ஆய்வுகூட உரிமையாளர் மன்னிப்புக் கோரியுள்ளதுடன், தவறு இனிவரும் காலங்களில் இடம்பெறாது எனக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார் என்பதைத் தங்களுக்கு அறியத் தருகின்றேன் என முறைப்பாட்டாளருக்குத் தெரிவித்துள்ளார்.

## ஊடகம் தொடர்பாக

# கொரேதொடுவை மு.வி. மாணவர்களுக்கு பயிற்சி



அஷ்ரப் ஏ. சமத்

மொரட்டுவை, கொரேதொடுவை முஸ்லிம் வித்தியாலயத்தில் 25 பேர் கொண்ட ஊடக அணி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு இலத்திரனியல் ஊடகம், புகைப்படப்பிடிப்பு, வீடியோ கமரா இயக்கம் போன்ற துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் எஸ்.எச். முத்தலிப் தலைமையில் நேற்றுமுன்தினம் கல்லூரியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# வாகன விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி, பள்ளிவாசல்துறைப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு (07) இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததாக கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி, திகழி, ஏத்தாளையைச் சேர்ந்த சஹாப்தீன் சல்மான் (வயது 25) எனும் இளைஞனே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும் சிறிய ரக லொறியொன்றும் கற்பிட்டி பள்ளிவாசல்துறை கண்டல்குடா பாலத்துக்கருகே மோதியதாலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அங்கிருந்தவர்கள் குறித்த இளைஞனை சிகிச்சைக்காக கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த குறித்த இளைஞன், கற்பிட்டி, குறிஞ்சிப்பிட்டியில் 07 ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் பந்தயப் போட்டியைப் பார்வையிட்ட பின் தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக சொல்லப்படுகிறது. விபத்துச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் மூன்றுக்கு ஆட்சேர்ப்பு

## மாத இறுதியில் போட்டிப்பரீட்சை

எம்.எஸ்.எம்.முன்தஸிர்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் மூன்றுக்கு ஆட்சேர்ப்புக்கான ஆரம்ப நடவடிக்கைகளை கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

அதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் பத்தரமுல்ல இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை கல்வியியலாளர் சேவையின் மூன்றாம் தரத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலேயே ஆட்சேர்ப்புக்கான போட்டிப்பரீட்சை இடம்பெறவுள்ளது. இந்த நேர்முகத் தேர்வின்போது, கோரப்பட்ட ஆவணங்களும் சானறிதழ்களும் சரிபார்க்கப்பட்டு ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதிகளை நிறைவுசெய்ததாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் திறன் மதிப்பீட்டு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பில் கடந்த 02 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் விண்ணப்பதாரர்கள் அடிப்படைத் தகைமைகளை முறையாக நிரூபிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது எனவும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

சனிக்கிழமை 2023.07.08 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5169 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,507,432.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 4 4 4 4 0 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3411 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,651,938.00
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 26 47 76 79

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1199 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,736,027.20
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 26 49 69 71 — விசேட எழுத்து G

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 478 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,928,377.00
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 04 06 22 30 — விசேட இலக்கினம் துலாம்

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1517 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,379,736.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 25 — வெற்றி இலக்கங்கள் 25 26 28 52
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

வெள்ளிக்கிழமை 2023.07.07 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5168 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,259,164.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 3 0 5 3 2 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3410 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,445,630.40
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 04 45 48 78

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1198 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,498,079.20
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 20 21 50 69 — விசேட எழுத்து Q

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 477 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,792,180.60
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 04 08 30 41 — விசேட இலக்கினம் கும்பம்

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1516 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,252,148.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 03 41 59 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பேசாலை நடுக்குடா கடற்கரையை வந்தடைந்த இந்திய மீட்புக் கப்பல்



மன்னார் நகர் நிருபர்

பேசாலை நடுக்குடா கடற்கரைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை (7) மாலை தாரை தட்டிய கப்பல் மற்றும் பாஜ் என அழைக்கப்படும் கொள்கலன் தாங்கி ஆகியவற்றை மீட்டுச் செல்வதற்காக இந்தியாவிலிருந்து கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (8) மாலை 4 மணியளவில் பேசாலை நடுக்குடா கடற்கரையை வந்தடைந்துள்ளது.

மாலைதீவில் இருந்து இந்தியாவின் தூத்துக்குடி நோக்கி கொள்கலன் தாங்கியை இழுத்துக்கொண்டு வந்த கப்பலொன்று இயந்திரக் கோளாறு காரணமாக மன்னார், பேசாலை நடுக்குடா பகுதியில் வெள்ளிக்கிழமை (7) மாலை தரை தட்டியுள்ளது.

இதன்போது குறித்த கப்பலில் 11 பணியாளர்கள் இருந்ததாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் குறித்து இந்தியாவின் கப்பல் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதாகவும்,கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

இதற்கமைவாக குறித்த நிறுவனமும் கடற்படையும்,சமுத்திரவியல் சேவை மற்றும் மீட்புப் பணியகம் ஆகியவை இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவிலிருந்து மாலைதீவுக்கு பொருட்களைக் கொண்டுசென்ற பாஜ் என அழைக்கப்படும் கொள்கலன் தாங்கி மீண்டும் கப்பலொன்றின் மூலம் இந்தியாவை நோக்கி கொண்டுசென்ற போதே இலங்கை கடற்பரப்பில் கரை தட்டியது. 87 மீற்றர் நீளம் கொண்ட குறித்த கொள்கலன் தாங்கி எந்தவித பொருட்களுமற்ற நிலையில் கப்பல் மூலம் இழுத்துவரப்பட்டது.

இதன்போது கடல் பிராந்தியத்தில் வீசிய கடும் காற்று,அலையின் சீற்றம் காரணமாக குறித்த கப்பல் மற்றும் கொள்கலன் தாங்கி ஆகியவை இலங்கை கடற்பரப்பை நோக்கி இழுத்துவரப்பட்டிருக்கலாம் என கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த கப்பல் மற்றும் பாஜ் என அழைக்கப்படும் 87 மீற்றர் நீளம் கொண்ட கொள்கலன் ஆகியவற்றை மீட்டுச் செல்வதற்காக இந்திய கப்பல் ஒன்று (8) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் பேசாலை நடுக்குடா பகுதியை வந்தடைந்தது.

இந்நிலையில், நடுக்குடா கடற்கரைப் பகுதியில் கரைதட்டிய கப்பல் மற்றும் பாஜ் என அழைக்கப்படும் கொள்கலன் தாங்கி மற்றும் மீட்டுச் செல்ல வந்த கப்பல் ஆகியவற்றைப் பார்வையிட மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

எனினும், குறித்த கப்பல் நாட்டை வந்தடைந்த நிலையில் தற்போது வரை மீட்டுச் செல்வதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வீட்டுக் கிணற்றில் இருந்து வெடிக்காத நிலையில் மோட்டார் ஷெல்கள் மீட்பு



சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி-தச்சன்தோப்பு பகுதியிலுள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து 08/07 சனிக்கிழமை மதியம் வெடிக்காத நிலையில் 24 மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாவனையில் இல்லாத நிலையில் காணப்பட்ட கிணற்றை வீட்டு உரிமையாளர் சுத்தப்படுத்தியபோதே மேற்படி இரும்புப்பெட்டி அவதானிக்கப்பட்ட நிலையில், உடனடியாக இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தி ஷெல் பெட்டி கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராணுவத்தினரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ்ப்பாண பஸ் எரிந்தமை தொடர்பில் தவறான பிரசாரம்

## தீயில் கருகிய அதி சொகுசு பேருந்தின் உரிமையாளர் துவாரகேஸ்வரன் தெரிவிப்பு




யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த அதிசொகுசு பஸ் புத்தளம் பகுதியில் தீ விபத்தில் முழுமையாக எரிந்தமை தொடர்பாக சில ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் விஷமத்தனமான செய்திகளை வெளியிட்டுள்ளதாக விபத்தில் எரிந்த காரை எக்ஸ்பிரஸ் பேருந்தின் உரிமையாளர் தி.துவாரகேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்கள் உண்மையை அறிந்து செயற்பட வேண்டும் என்பதுடன் தவறான போலி செய்தியை வெளியிட்டவர்களுக்கு எதிராக பொலிஸ் மா அதிபரிடம் இன்று திங்கட்கிழமை முறைப்பாடு செய்யவுள்ளேன் - என்றார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே தி.துவாரகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி 43 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த அதிசொகுசு பஸ் புத்தளம் – மதுரங்குளி செம்பட்டை பகுதியில் ஜூன் 30 ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற தீ விபத்தில் முழுமையாக எரிந்து நாசமாகியது.

எனினும், பேருந்தில் பயணம் செய்த பயணிகள் எவருக்கும் காயங்களோ அல்லது உயிருக்கோ உடமைக்கோ சேதங்கள் ஏற்படவில்லை.

விபத்தின்போது பேருந்து சாரதியும் நடத்துனரும் துணிகரமாக செயற்பட்டு பேருந்தில் பயணித்தவர்களைக் காப்பாற்றினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஒரு சில ஊடகங்கள் பேருந்து திட்டமிட்டு எரிக்கப்பட்டதாக விஷமத்தனமான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

ஏன் இவ்வாறு செய்கிறார்கள் என்று தெரியவில்லை. செய்தி தொடர்பாக தெளிவு வேண்டியவர்கள் பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரைத் தொடர்பு கொள்ளலாம்.

பயணித்த 43 பேரின் விபரங்களையும் தர நான் தயார். அவர்களிடமே நடந்தவற்றைக் கேட்டறிய முடியும்.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்கள் உண்மையை அறிந்து செயற்பட வேண்டும் என்பதுடன் தவறான போலி செய்தியை வெளியிட்டவர்களுக்கு எதிராக பொலிஸ் மா அதிபரிடம் இன்று திங்கட்கிழமை முறைப்பாடு செய்யவுள்ளேன் - என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## வடக்கு கல்வியமைச்சின் செயலராக டிரஞ்சன்



வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பற்றிக் டிரஞ்சன் நியமிக்கப் பட்டுள்ளார்.

பற்றிக் டிரஞ்சன் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த உமாமகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்டத்தின் செயலாளராக நியமிக்கப்படவுள்ள நிலையில், குறித்த வெற்றிடத்திற்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக பற்றிக் டிரஞ்சன் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டுவில் வீதிப் பகுதியில் 06/07 வியாழக்கிழமை மதியம் வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீதியால் சென்ற பெண்ணுடைய மூன்று பவுண் நிறை கொண்ட சங்கிலியை மோட்டார்சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த நபர்கள் அறுத்துக்கொண்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## திருட்டு முயற்சி இளைஞன் கைது

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி பிரதேசத்தில் வீடு உடைத்து திருட முயன்ற குற்றச்சாட்டில் 08/07 சனிக்கிழமை இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆட்கள் இல்லாத வீடொன்றினை உடைத்து திருட முற்பட்ட வேளையில் அயலவர்கள் மேற்படி சந்தேக நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக தெரிய வருகிறது.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஓ.எம்.பி. அலுவலகத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சியில் போராட்டம்



காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தால் (OMP) மேற்கொள்ளப்படும் பதிவுக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட ஓ.எம்.பி. அலுவலகத்தினால் அழைக்கப்பட்டவர்களிற்கான பதிவுகள் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக ஆணையாளர் ரி. ஜோகராஜா, கிளிநொச்சி பிராந்திய இணைப்பாளர் நிசாந்தன் ஜூட் பீரிஸ் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது ஆதங்கத்தை வெளியிட்டனர்.

இதன்போது, போராடுவதற்கான உரிமை உள்ளதாகவும் பதிவுக்காக வருகை தருபவர்களிற்கு இடையூறு இல்லாமல் செயற்படுமாறும் ஆணையாளர் தெரிவித்தார்.

# எட்டு மாதங்களுக்கு முன்னர் காணாமல் போன சிறுமி பேலியகொட பொலிஸாரால் கண்டுபிடிப்பு

ராமு தனராஜா

லுணுகலை சூரியகொட பகுதியில் கடந்த 8 மாதங்களுக்கு முன் காணாமல் போன 14 வயது சிறுமியொருவர் பேலியகொட பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த 14 வயது சிறுமி பேலியகொட பகுதியில் தனது 22 வயது காதலனுடன் தங்கியிருந்த நிலையில், பேலியகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். லுணுகலை, சூரியகொட பகுதியில் கடந்த வருடம் டிசம்பர் 24 ஆம் திகதி குறித்த 14 வயது சிறுமியை காணவில்லை என அவரின் பெற்றோரால் லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

மேலதிக வகுப்பிற்குச் சென்று வருவதாகத் தெரிவித்து வீட்டிலிருந்து வெளியேறிய சிறுமியே காணாமல் போயிருந்தார்.

அதனைத்தொடர்ந்து லுணுகலை பொலிஸாரால் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் சிறுமி குறித்த தகவல்கள் வழங்கப்பட்டு தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், லுணுகலை பொலிஸார் வழங்கிய தகவலுக்கமைவாக பேலியகொட பொலிஸாரால் குறித்த சிறுமியும் 22 வயது இளைஞர் ஒருவரும் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் லுணுகலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த சிறுமி அதே பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவருடன் பேலியகொட பகுதியில் வாடகை விடுதியொன்றில் தங்கியிருந்தமை தெரியவந்துள்ளது. மேலும் காணாமல்போனபோது 14 வயதாக இருந்த குறித்த சிறுமியின் வயது தற்போது 15 வயதும் 4 மாதங்களும் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுமியைக் கடத்தி துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் குறித்த 22 வயது இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இருவரையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பதுளை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.



கண்டியிலுள்ள உதவி இந்தியத்தூதுவராலயம் கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் இந்தியாவில் பௌத்த உரிமைகளை வெளிக்காட்டும் கண்காட்சியொன்றை அண்மையில் ஒழுங்கு செய்திருந்தது. ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் தேல உட்பட பெருமளவு பொது மக்கள் இதனைக்கண்டு களிக்க சமுகமளித்திருந்தபோது... (படம்:கண்டி நிருபர்)

## பழ விற்பனையாளருடன் வாய்த்தர்க்கம்: கத்திக்குத்துக்கு இலக்கானவர் வைத்தியசாலையில்

செ.திவாகரன், டி.சந்ரு, ஆ.ரமேஸ்



நுவரெலியாவில் பழ விற்பனையாளருடன் நபரொருவருக்கு ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதால் பின்னர் கத்திகுத்துக்கு ஆளாக வேண்டிய நிலையில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா பிரதான நகரில் சனிக்கிழமை காலை இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நுவரெலியா பிரதான நகரில் நடைபாதையில் பழங்கள் விற்பனை செய்யும் நபரொருவருக்கும் மற்றைய நபருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இவ்வாறு வாக்குவாதம் முற்றிய நிலையில், பின்னர் அது கத்திக்குத்துச் சம்பவமாக மாறியுள்ளது..

இதில் படுகாயமடைந்த நுவரெலியா, பம்பரகலை தோட்டத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஆறுமுகம் ஹாரியதாஸ் என்ற நபர் படுகாயத்துடன் ஆபத்தான நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த சம்பவத்தில் கத்தியால் குத்திய பழங்கள் விற்கும் வியாபாரி தானாகவே நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அப்பகுதியில் உள்ள சிசிடிவி கமெராவில் பதிவான காட்சிகளின் அடிப்படையில் நுவரெலியா பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மின்சாரம் தாக்கியதால் நபரொருவர் மரணம்!

கண்டி நிருபர்

மின்சாரம் தாக்கி ஒருவர் மரணடைந்துள்ளார். கண்டி, மடுல்கலை, வட்டகலை தோட்டத்தைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய ஒருவரே இவ்வாறு பரிதாபகரமாக மின்சாரத்தாக்குதலுக்குள்ளான நிலையில் மரணித்துள்ளார். இவர் எஸ்.ஜெயசங்கர் (மனோ) எனும் குடும்பஸ்தர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒன்றரை வயது நிரம்பிய ஆண்குழந்தையின் தந்தையான இவர், மின் இணைப்பொன்றை மேற்கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பன்விலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## குளவிக் கொட்டுக்கு இலக்கான 4 பெண்கள் உட்பட ஐவர் காயம்

கண்டி, தலவாக்கலை நிருபர்கள்

லிந்துலை பெயார் வெல் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் ஐவரை குளவி கொட்டியதில் காயமடைந்துள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான 4 பெண் தொழிலாளர்கள் மற்றும் ஒரு ஆண் தொழிலாளியும் சிகிச்சைக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கணினி கொள்ளையில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள் மூவர் கைது

மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள சாமிமலை, தெய்வகந்த தமிழ் வித்தியாலயத்தில் கடந்த 4ஆம் திகதி கணினி கொள்ளையடித்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பாடசாலை அதிபர் அன்றைய தினம் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் பணிப்புரையின்கீழ் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொலிஸார் மேற்கொண்டு வந்த புலனாய்வில் அப்பகுதியிலுள்ள மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்கள் மூன்று பேரும் முறையே 16,16, 19 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும் அவர்களிடமிருந்து கணினி கைப்பற்றப்பட்டு நேற்றைய தினம் ஹட்டன் நீதிமன்றத்தில் குறித்த நபர்களை ஆஜர்ப்படுத்தவுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# மாகாஸ்தோட்ட கருமாரியம்மன் ஆலய உண்டியல் பணம் திருட்டு

செ.திவாகரன் - டி.சந்ரு

நுவரெலியா மாகாஸ்தோட்டம் கீழ்ப் பிரிவு தோட்ட ஆலயத்தில் இரண்டாவது தடவையாகவும் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா மாகாஸ்தோட்டம் கீழ்ப்பிரிவு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் (08) சனிக்கிழமை இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாலயத்தின் பிரதான நுழைவாயில் கதவின் பூட்டை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த திருடர்கள் ஆலய வெளிமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தைத் திருடியுள்ளனர்.

திருடப்பட்ட உண்டியலை ஆலய முற்றத்தில் வைத்து உடைத்து பணத்தை எடுத்துக்கொண்டு உண்டியலை அங்கேயே விட்டுச்சென்றுள்ளனர். இதனையடுத்து நுவரெலியா பொலிஸாருக்கு தெரிவித்ததையடுத்து அங்கு சென்ற பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் விரல் அடையாளங்களையும் எடுத்துக்கொண்டார்கள்.

இந்நிலையில், வழக்கம்போல் ஞாயிற்றுக்கிழமை காலை கோவிலில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்காக வந்த அக்கோவில் பூசகர் பிரதான கதவுப் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்து ஆலய நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்துள்ளதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்திற்கு தெரிவித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, இதற்கு முன்னரும் இவ் ஆலயத்தில் சுவாமி சிலையில் அணிவிக்கப்பட்டிருந்த தாலிமணி, தங்க ஆபரணங்களையும் ஆலய ஒலிபெருக்கி உபகரணங்கள் மற்றும் ஆலய உண்டியல் காணிக்கை, பணம் என்பன திருட்டுப் போயிருந்தமை தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் இருப்பினும், அது தொடர்பில் பொலிஸார் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும் ஆலய நிர்வாகத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனினும், சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிவித்த நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பிக்கு,தாய்,மகளை நிர்வாணமாக்கி தாக்கியவர்களுக்கு விளக்கமறியல்!



நவகமுவ, போமிரிய பிரதேசத்தில் தேரர், அவருடன் உல்லாசமாக இருந்த தாய், மகளை நிர்வாணமாக்கி தாக்கி, வீடியோ பதிவு செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 8 சந்தேக நபர்கலும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடுவெல பதில் நீதவான் ஹேமந்த வெத்தசிங்க இந்த உத்தரவை சனிக்கிழமை பிறப்பித்தார்.

சந்தேகநபர்கள் 8 பேரையும் எதிர்வரும் 12ஆம் திகதி அடையாள அணிவகுப்பில் முன்னிலைப் படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், முறைப்பாடு செய்தவருக்கு எதிராக முறைப்பாடு செய்ய தமது தரப்பு விரும்புவதாக நீதவானிடம் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாடுகளை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஊழல், மோசடிகளை ஒழிப்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பு

## இலஞ்சம் - ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர்

முழு நாட்டினதும் எதிர்பார்ப்பாகக் காணப்படும் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை எதிர்ப்போரை மக்கள் புறக்கணிப்பர் எனத் தெரிவித்த இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெனரல் சரத் ஜயமான்ன, ஊழல் மோசடிகளை ஒழிப்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும் என்றும் கூறினார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் 101 கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் செயற்பாடுகளை போராட்ட வடிவங்களாக மாற்றிக்கொள்ளாது அவற்றை ஒழித்துக்கட்டுவதற்கான விடயமாகவே ஊழல் ஒழிப்புக்கான புதிய சட்டம் கொண்டு வரப்படவிருக்கிறது. அதனால் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிகள் முழுமையாக சுயாதீனத்தன்மை கொண்டதாக மாறும்.

இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் காரணமாக இலங்கை மாத்திரமின்றி, முழு உலகமும் நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது. எந்தவொரு நாட்டினதும் ஊழல் செயற்பாடுகள் அந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதிக்கும். அதனால் தமது நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமென்ற எண்ணம் கொண்ட தலைவர்களும் மக்களும் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை மட்டுப்படுத்திக்கொள்ளவே எதிர்பார்ப்பர்.

அதற்காகவே 2004 ஆம் ஆண்டில் உலக நாடுகள் இணைந்து ஊழலுக்கு எதிரான கொள்கைகளை உருவாக்கின. நமது நாடும் அந்தக் கொள்கைத் திட்டத்தில் 2004 ஆம் ஆண்டிலேயே கையொப்பம் இட்டிருந்தாலும் தற்போது வரையில் உள்நுழையாமல் இருப்பது வருத்தத்துக்குரியதாகும். அதனாலேயே எமது நாட்டின் அரச மற்றும் தனியார் துறைகளில் மோசடி செயற்பாடுகள் நிறைந்து காணப்படுவதாக மக்கள் நினைக்கின்றனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை முற்றாக ஒழித்த நாடுகள் அதனை எவ்வாறு சாத்தியப்படுத்திக்கொண்டன என்பதைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும். அந்த நாடுகளின் மக்கள் மத்தியில் மேற்படி செயற்பாடுகளை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கம் வேறூன்றிக் காணப்படுகின்ற போதிலும் நமது நாட்டவர் மத்தியில் அவ்வாறான எண்ணங்கள் இல்லை. அதனால் கல்வித்துறையில் முழுமையான மறுசீரமைப்பை மேற்கொள்ளும் அதேநேரம், சட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.



புதிய சட்டம் கொண்டுவரப்படும் பட்சத்தில் எமது அபிமானம் மேலோங்கும். இருப்பினும், சட்டம் கொண்டுவரப்படுவதால் மாத்திரம் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் முற்றாக ஒழிந்துவிடாது.

1954 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட ஊழல் ஒழிப்புச் சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்பட்டு 1994 ஆம் ஆண்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முதல் 30 வருட காலப்பகுதியில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபையுடன் நாம் இணைந்துகொண்டு 20 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன.

இதன் முக்கியமான விடயமாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பிரதானிகள் வார்த்தைக்கு அப்பால் சென்று சுயாதீனமாக செயற்பட வேண்டியது அவசியமாகும். சுயமாகத் தீர்மானம் மேற்கொண்டு சுயாதீனமாக செயற்படுவதற்குமான சூழல் அவர்களுக்கு உருவாக்கிக்கொடுக்கப்பட வேண்டும்.

1954 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை எமது நாட்டில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் பணியானது கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் சித்தியடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால், இலஞ்சம், ஊழல் போன்ற சிக்கலான குற்றங்களை வெளிப்படையாகக் கண்டறியக்கூடிய ஆற்றல், நுண்ணறிவு, கணிதம், பொறியியல், தடயவியல் தணிக்கை, கணக்குப் பதிவியல் போன்ற விடயப்பரப்புகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிடத்திலேயே காணப்படுகின்றது.

இதற்காக நமது நாட்டில் அதிகாரிகள் ஆட்சேர்ப்பின்போது சிவில் சேவைக்கான ஆட்சேர்ப்பு முறையைப் பின்பற்றியே மேற்படி அதிகாரிகளும் நியமிக்கப்படுகின்றனர்.

இந்தப் புதிய சட்டத்தினூடாக, ஆணைக்குழுவுக்கு அவசியமான நிபுணர்களை புலனாய்வாளர்களாக நியமிக்க அதிகாரம் உள்ளது. அவர்களின் சேவை திருப்தியற்றதாகக் காணப்படும் பட்சத்தில் ஒப்பந்த காலம் நீடிக்கப்படுவதைத் தவிர்க்கலாம். இதன்படி, திறமையான புலனாய்வாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய மேற்படிச் சட்டத்தின் ஊடாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அவர்களுக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு நிதி அமைச்சுக்கோ அல்லது திறைசேரிக்கோ செல்லவேண்டிய அவசியமில்லை. அதற்கான பணம் பாராளுமன்றத்தின் மூலம் திறைசேரியில் இருந்து வழங்கப்படும். இந்தச் சட்டத்தினால் கடமை மோதல், தனியார் துறை, இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பது போன்ற சிறப்புப் பகுதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், வரலாற்றில் முதன்முறையாக அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளின் சொத்து விவரங்கள் இலத்திரனியல் முறைமையின் ஊடாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அதேபோல், கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அவற்றை பழமையான சட்ட முறையின் கீழ் விசாரணை செய்து தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவும் இடமளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# காணாமல்போன சின்னத்தை கண்டுபிடிக்க உதவுங்கள்

## ஜனாதிபதியின் செயலாளர் பொதுமக்களிடம் கோரிக்கை



Jorge de Albuquerque (1622) | Constantine De Sa' Miranda (1630) | Sir Joseph West Ridgeway (1895) | Sir William Manning (1918-1925) | Viscount Soulbury (1949-1954)

தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ சின்னமான (Coats of Arms) எவரிடத்திலேனும் இருக்குமாயின் அதனை ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையை 2022-07-09 முதல் 2022-07-14 வரையான காலப்பகுதியில் பலவந்தமாகக் கையகப்படுத்தி அதற்குள் போராட்டக்காரர்கள் தங்கியிருந்தனர். இக்காலப்பகுதியில் கலைத்துவ மற்றும் தொல்லியல் பெறுமதிமிக்க பல்வேறு பொருட்கள் காணாமல் போயுள்ளன. இலங்கையின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ சின்னமாகக் காணப்பட்ட (Coats of Arms) சின்னங்கள் பலவும் அவற்றுள் அடங்குகின்றன.

இது பற்றிய தகவல்களை அறிந்திருப்பின் 0112354354 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக ஜனாதிபதி செயலகத்துக்கு தகவல் வழங்குமாறு கேட்டுகொண்ட ஜனாதிபதியின் செயலாளர், தேசிய பெறுமதிமிக்க உத்தியோக பூர்வ சின்னத்தைத் தேடியறிவதற்கு மக்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சொத்துகளை சட்ட விரோதமாக தம்வசம் வைத்துக்கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதால், குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மேற்படி சின்னம் நபரொருவரிடத்தில் அல்லது நிறுவனமொன்றிடத்தில் இருக்கும் பட்சத்தில் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதியின் செயலாளர்சமன் ஏக்கநாயக்க சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது.



**ஐக்கிய தேசியக் கட்சியின் ஜிந்துப்பிட்டி தொகுதி அமைப்பாளராக மொஹமட் நைஸர் (டிஸ்கோ ராஜா)நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளர் பைரூஸ் வழங்கினார்.**

**படப்பிடிப்பு:** எம்.நசார்



**இலங்கைக்கான கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள காலி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவரும் காலி அலிய்யா அரபுக் கல்லூரி பணிப்பாளருமான கலீபதுஷ் ஷாதுலி முஹம்மது ஸுஹுர் ஆலிமை வரவேற்கும் நிகழ்வு பாணந்துறை, தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தொழிலதிபர் மில்பர் மக்கீன் மற்றும் பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத் தலைவர் இம்தியாஸ் முஸம்மில் ஆகியோர் அன்னாரை பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர்.**

**படப்பிடிப்பு:** எம்.எஸ்.எம்.முன்தஸிர்

# வாகன விபத்து; எழுவர் படுகாயம்!



*கலஹா செய்தியாளர்*

கம்பளை, ஹெம்மாத்தகம வீதி, அம்புலுவாவ 3 ஆம் கட்டைப் பிரதேசத்தில் கார் ஒன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இரு சிறுவர்கள் உட்பட ஏழுபேர் படுகாயமடைந்து ஹெம்மாத்தகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹெம்மாத்தகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த 08 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் கம்பளை, உலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரே குடும்ப அங்கத்தவர்களான ஏழுபேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

உலப்பனையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்தவர்களே விபத்தில் சிக்கியுள்ளனர்.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவ்வழியாக கம்பளை நோக்கிப் பயணித்த ஹெம்மாத்தகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமனசேகர, 100 அடி பள்ளத்தில் கார் வீழ்ந்திருந்ததைக் கண்டு பிரதேச வாசிகளை அழைத்து காயமுற்றவர்களை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஹெம்மாத்தகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிளாஸ்ரிக் பாவனையால் விலங்குகளுக்கு பாதிப்பு

## வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம்




பிளாஸ்ரிக் பாவனையால் விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்தக்கோரியும் நேற்றுக் காலை விழிப்புணர்வு ஊர்வலமொன்று வவுனியாவில் இடம்பெற்றது.

இந்து - பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் வவுனியா பூங்கா வீதியில் உள்ள பல்கலைக்கழக வெளிவாரி பிரிவுகள் அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய விழிப்புணர்வு ஊர்வலம் நகர்வழியாகச் சென்று மீண்டும் மேற்குறித்த இடத்தைச் சென்றடைந்தது.

இதன்போது வீதியோரங்களில் காணப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களால் அகற்றப்பட்டன. இதில் இந்து - பௌத்த சங்கத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்





அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வைத்தியசாலைக் குழுவின் பதில் தலைவரும் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபருமான எம்.ஏ.சீ.ஏ.ஐயூப் தலைமையில் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (07) நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் ஸ்தாபகரும் தேசிய காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா மற்றும் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ரஜாப், வைத்தியசாலை குழு உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதி உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சுகாதார உதவியாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் காலஞ்சென்ற வைத்தியசாலைக் குழுவின் தலைவர் டாக்டர் எம்.ஏ.றக்கிஸ்து நினைவு கூரப்பட்டு பிரார்த்தனை நடைபெற்றது. வரவேற்புரையை வைத்தியசாலைக் குழுவின் பதில் தலைவர் நிகழ்த்தியதுடன் வைத்தியசாலையின் தற்போதைய மற்றும் எதிர்கால நிலைமைகள் தொடர்பாக வைத்திய அத்தியட்சகர் சமர்ப்பணம் செய்தார். மேலும், அதாஉல்லா எம்.பி. வைத்தியசாலையின் எதிர்கால, தற்போதைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் உரையாற்றியதுடன் நன்றியுரையை வைத்தியசாலை குழுச் செயலாளரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி யூ.எல். செய்னுடீன் நிகழ்த்தினார்.

இதன்போது இவரது சேவையைப் பாராட்டி வைத்திய அத்தியட்சகரினால் பாராளுமன்ற உறுப்பினருக்கு பொன்னாடை போர்த்தி ஞாபகச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



***வாழைச்சேனை அன்நூர் தேசிய பாடசாலையில் 2008ஆம் ஆண்டு சாதாரண தர பழைய மாணவர் சங்கத்தினரால் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (07) அஹமட் ஹிராஸ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ஜெயின்னுல் ஆப்தீனின் வேண்டுகோளுக்கிணங்க, தரம் 04 மற்றும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள் என்பன கையளிக்கப்பட்டன.***

# சம்பூர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவை





மூதூர் செய்தியாளர்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சம்பூர் மகா வித்தியாலயத்தில் நடமாடும் சேவை சனிக்கிழமை(08) இடம்பெற்றது.

மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், மாகாண சமூக சேவைத் திணைக்களம், மூதூர் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து குறித்த நடமாடும் சேவையை ஏற்பாடு செய்திருந்தன.

இவ் நடமாடும் சேவைக்கான அனுசரணையை இளைஞர் அபிவிருத்தி அகம் வழங்கியிருந்தது. இந்த நடமாடும் சேவையில் வைத்திய முகாம், முதியோர் கொடுப்பனவு, தேசிய அடையாள அட்டை, பிறப்பு- இறப்புச் சான்றிதழ்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான சேவை என பல்வேறு சேவைகள் இடம்பெற்றன.

இதில் கடந்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பல்வேறு இழப்புகளைச் சந்தித்த சம்பூர் பகுதியைச் சேர்ந்த அதிகளவான பொதுமக்கள் கலந்துகொண்டு தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொண்டனர். இதில் மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், மாகாண சமூக சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தமது சேவைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வை.எம்.எம்.ஏ. பேரவையின் கிழக்கு மாகாண பொறுப்பு உதுமாலெப்பைக்கு





எம்.ஐ.எம்.றியாஸ்

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் உபதலைவர்களில் ஒருவரான எம்.ஐ.உதுமாலெப்பைக்கு கிழக்கு மாகாணத்தின் அங்கத்துவ வை.எம்.எம்.ஏகளின் அபிவிருத்திக் குழுவின் தவிசாளருக்கான நியமனக் கடிதம் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீடினால் வழங்கப்பட்டது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் தலைமையில் சனிக்கிழமை(08) மாலை பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற 2023 / 2024 இற்கான முதலாவது நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் போது பேரவையின் முன்னாள் தலைவர்கள், நிரந்தர அங்கத்துவ உறுப்பினர்கள் மற்றும் விசேட அங்கத்துவ உறுப்பினர்கள் மற்றும் உப குழுக்களின் தவிசாளர்களுக்கான நியமனங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

இதில், உதுமாலெப்பை வடக்கு மாகாணத்தின் அங்கத்துவ வை.எம்.எம்.ஏ.களின் அபிவிருத்திக் குழுவின் தவிசாளராக பொறுப்பாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அகில இலங்கை





வை.எம்.எம்.ஏ.பேரவையின் உடனடி முன்னாள் தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி, பேரவையின் தற்போதைய தலைவர் இஹ்சான் ஏ.ஹமீடின் ஆலோசகராகவும் தேசிய விவகாரங்கள், சமூக நீர்த்திட்டம், உலகளாவிய நிதிய தேசிய ஒருங்கிணைப்புக் குழுப் பிரதிநிதி, காசநோய் கட்டுப்பாடு தேசியப் பணிக்குழுப் பிரதிநிதி (சுகாதார அமைச்சின் பிரதிநிதி) உள்ளிட்ட உப குழுக்களின் தவிசாளராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பேரவையின் முன்னாள் தலைவர் எம்.என்.எம்.நபீலுக்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கான உப குழுவின் தவிசாளருக்கான நியமனக் கடிதம் இதன்போது பேரவையின் தலைவரினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பேரவையின் போசகர் காலித் எம்.பாறூக், பேரவையின் பொதுச் செயலாளர் ஆசீப் சுக்ரி, பொருளாளர் பிர்தௌஸ் உட்பட பேரவையின் முன்னாள் தலைவர்கள், உபதலைவர்கள், பதவி வழி உத்தியோகத்தர்கள், நிரந்தர அங்கத்துவ உறுப்பினர்கள், விசேட அங்கத்துவ உறுப்பினர்கள், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# அந்நூர் ஜும்மா பெரியபள்ளிவாசலின் 1000 ஆவது குத்பாவும் அன்னதானமும்



மாளிகைக்காடு செய்தியாளர்

காரைதீவு பிரதேச செயலகத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட மாளிகைக்காட்டின் முதலாவது பள்ளிவாசலும் தலைமை ஜும்மா பள்ளிவாசலுமான அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலின் 1000ஆவது ஜும்மா குத்பாவும் பகல் உணவு வழங்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை(07) நடைபெற்றன.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பத்வா குழு உறுப்பினரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்-ஷெய்க் மௌலவி எம்.ஏ.எம்.அன்பாஸ் முப்தி 1000ஆவது குத்பா பேருரையையும் ஜும்ஆ தொழுகையையும் நிகழ்த்தினார்.

இதன்போது, கல்வி, சொத்துப்பிரிப்பு, போதைப்பொருள் பாவனையின் விளைவுகள், பள்ளிவாசல் நிர்வாகம் தொடர்பில் சிறப்புரை நிகழ்த்தினார். மாளிகைக்காட்டின் எல்லைப்புறத்தில் அமையப்பெற்றுள்ள இப்பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகை ஒன்றை தமது கிராமத்தவர்களுக்கென தனித்துவமாக நடைமுறைப்படுத்த முடியாமல், சாய்ந்தமருது பிரதேசத்தில் நீண்டகாலமாக நம்பியிருந்த நிலையில், மாளிகைக்காடு-சாய்ந்தமருது பிரதேச உலமாக்கள், சமூக செயற்பாட்டாளர்களின் அளப்பரிய தியாகங்களுக்கும் போராட்டங்களுக்கும்



மத்தியில் ஜும்ஆத் தொழுகையை ஆரம்பித்து இன்று அதன் 1000ஆவது ஜும்மா நிகழ்வை நடத்துகிறது என்பது ஒரு வரலாற்று சாதனை எனலாம்.

கடந்த 2004ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி முதல் ஜும்ஆ பள்ளிவாசலாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இப்பள்ளிவாசலின் முதலாவது குத்பா பேருரையும் ஜும்ஆ தொழுகையும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் முன்னாள் அதியுயர்பீட உறுப்பினரும் அகில இலங்கை பிறைக்குழுச் செயலாளரும் கொழும்பு ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளருமான காலஞ்சென்ற மௌலவி ஏ.எம்.அப்துல் அஸீஸினால் (மிஸ்பாஹி) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனைப் பிராந்தியத்தின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த உலமாக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் புர்கி அட்டாளைச்சேனைக்கு விஜயம்

## பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்பு





திராய்க்கேணி, திகாமடுல்ல செய்தியாளர்கள்

பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறூக் புர்கி வெள்ளிக்கிழமை(07) அட்டாளைச்சேனைக்கு வருகை தந்து பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருந்தார்.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் றஹ்மத் மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியொதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட 70 குழாய்க்கிணறுகள் மற்றும் மூன்று பொதுக்கிணறுகள் இதன்போது பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரால் திறந்துவைக்கப்பட்டன

சுத்தமான குடிநீரை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியின் மூலம் வை.டபிள்யூ.எம்.ஏ. நிறுவனத்தின் மூலம் இக்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களையும் அவர்களின் இடங்களையும் பார்வையிட்டதுடன் அவர்களது தேவைப்பாடுகளையும் உயர்ஸ்தானிகர் கேட்டறிந்து கொண்டார். மேலும், பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளையும் மென்பந்து கிரிக்கெட் துடுப்பு மட்டைகளையும் வழங்கி வைத்தார்.

அத்தோடு, அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றியதுடன் நீண்டகால வரலாற்றைக் கொண்ட இப்பாடசாலைக்கு எதிர்காலத்தில் உதவி செய்வதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் அறபா வித்தியாலய அதிபர் எம்.ஏ.அன்சார், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள், றஹ்மத் மன்சூர் பவுண்டேசன் அமைப்பின் நிர்வாகிகள் அஸ்வர் சாலி, றிஸ்வி, பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அப்துல் மஜீட் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அம்பாறை மாவட்டத்துக்கு முதன்முதலாக விஜயம்

## மருதமுனையில் மகத்தான வரவேற்பு

பாறுக் ஷிஹான், காரைதீவு செய்தியாளர்

நீர்கொழும்பை பிரதான தளமாகக் கொண்டு செயற்படுகின்ற அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கம் முதன்முதலாக கிழக்கு மாகாணத்துக்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்டது.

குறிப்பாக, ஞாயிற்றுக்கிழமை 09) இத்தொழிற்சங் கத்தின் பிரதிநிதிகள் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்தார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மீனவ அமைப்புகளையும் அரவணைத்து செயற்படுகின்ற திட்டத்தின் ஓர் அம்சமாகவே இவ்விஜயம் அமைந்தது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கொழும்புக் கடற்கரையில் தீக்கிரையானது. இதன்மூலம் நாடளாவிய ரீதியில் மீனவர்களுக்கு மிகப் பாரதூரமான தொடர் பாதிப்புகள் நேர்ந்துள்ளன. இந்நிலையில், அரசாங்கத்தால் நஷ்டஈடாகப் பெறப்பட்டுள்ள பல கோடி ரூபா இழப்பீடு நாடளாவிய ரீதியில் மீனவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று முன்வைத்து கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கம் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இது குறித்த அறிவூட்டல், தெளிவூட்டல், விழிப்பூட்டல் ஆகியவற்றை வழங்கி வழக்கு நடவடிக்கையிலும் இழப்பீட்டிலும் வடக்கு, கிழக்கு மீனவ அமைப்புகளையும் அகில



இலங்கை மீனவர் தொழிற்சங்கம் சட்டப்படி உள்ளீர்க்கின்றது.

இந்நிலையில், மருதமுனை -06 மக்பூலியா மீன்பிடிச் சங்கத்தால் அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. இதில் காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேச மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சர்மில் ஜஹானின் ஒருங்கிணைப்பில் மக்பூலியா மீன்பிடிச் சங்கத் தலைவர் எம்.ஐ.எம்.பாறுக் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார்.

அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் டினேஸ் ரஞ்சன் பெர்னாண்டோ, தலைவர் அருண் ரொசாந்த மற்றும் தேசிய அமைப்பாளர் பிரசன்ன பெர்னாண்டோ உள்ளிட்டோர் சிறப்புரைகளை மேற்கொண்டனர். அருண் ரொசாந்த அவருடைய உரையில், சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல் என்கிற போர்வையில் அரசாங்கத்தால் கடல் வளம் திட்டமிடப்பட்டு அழிக்கப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டினார். மீனவர்களின் நலன் பேணும் நடவடிக்கைகள் அனைத்திலும் இணைந்து செயற்படுவது என்று அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கம், மக்பூலியா மீன்பிடிச் சங்கம் ஆகியன ஒருமனதாக இணக்கம் கண்டு நல்லெண்ண புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஆவணங்களைப் பரிமாறிக் கொண்டன.

இதன்படி, அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கத்துடன் முதன்முதலாக கைகோர்த்துள்ள வரலாற்றுப் பெருமையை மருதமுனை -06 மக்பூலியா மீன்பிடிச் சங்கம் பெற்றுள்ளது என்று மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சர்மில் ஜகான் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

# உப்பு உற்பத்திக்கான நிர்ணய விலை இன்மை

## உற்பத்தியாளர்கள் கவலை



கந்தளாய் செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் வில்வெளி, கச்சக்கொடித்தீவு போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் சுமார் 68 ஏக்கர் உப்பு உற்பத்திச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உப்பு உற்பத்திச் செய்கைகள் வருடா வருடம் தொடர்ந்தும் நிலத்தைப் பண்படுத்தி செய்யப்பட்டு வருகின்ற அதேவேளை, உப்பு உற்பத்திக்கான நிர்ணய விலை கிடைக்காமை தொடர்பிலும் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு 2ஆயிரம் ரூபா மற்றும் 2ஆயிரத்து 500 ரூபா அளவில் விற்பனை செய்யப்பட்டு வந்த உப்பு, இந்த வருடம் 500ரூபா மற்றும் 600 ரூபாவாகவே உள்ளது. உப்பு உற்பத்தியை நம்பி வாழும் 300 குடும்பங்கள் பாதிப்பை எதிர்நோக்குவதாகத் தெரிவித்த உற்பத்தியாளர்கள் தற்போது பதப்படுத்தப்பட்டு செய்கைக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாகவும் தெரிவித்தனர். மேலும், உற்பத்திச் செய்கையின் பிற்பாடு கொள்வனவுக்கு உகந்த வகையில் ஏற்றுமதி செய்வதில் இழுபறி நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மாரி மழை காலங்களில் நன்னீர் கலப்பு தங்களது உற்பத்திக்கு பெரும் சவாலாகவே உள்ளது. ஒட்டு மொத்தமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிக்கும் இவ்வாறான உப்பளங்களை விருத்தி செய்வதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



***விளக்கு கூட்டமைப்பு வழிதவறினால் வெளியேறத்தயங்கமாட்டோம் என அந்த கட்சிக்கூட்டில இருக்கிற ஜனநாயக போராளிக்கட்சி செயலாளர் பொடியன் இ.கதிர் சொல்லியிருக்காரு எலுவா.? வவுனியாவுல ரெலோக்கட்சி ஆருக்கும் தெரியாம சீனாவால செய்யப்போற சீனி தொழில்சால சம்மந்தமாக அந்த DTNA கட்சிக்குள இருக்கிற ஐந்து கட்சிக்குள ஒருமித்த கருத்து இல்ல எண்டத இந்த பொடியன் சொன்னத பார்த்து நல்லா தெரியுது எலுவா?***

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

மண்டூர் செய்தியாளர்

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விவேகானந்தபுர பிரதேசத்தில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை(08) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுரவணையடியூற்று, திக்கோடை பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நாகமணி நாராயணபிள்ளை என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். வழக்கம்போல் தனது வீட்டிலிருந்து அருகிலுள்ள ஆலயத்துக்குச் சென்றவர் வீடு திரும்பாத நிலையில், மறுநாள் உறவினர் ஒருவர் குறித்த வீதியூடாக தனது கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு சென்று கொண்டிருக்கும்போது குறித்த நபர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதத்தைப் பாவையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



***தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கு வரும் நீர்வழங்கலானது எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல் அண்மைக்காலமாக அதிக நேரம் நீர் விநியோகம் தடைப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அந்தவகையில், இந்தப் பிரச்சினை சம்பந்தமாக அண்மையில் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஏ.சீ.நியாஸ் நீர்வழங்கல் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம்.முஸாஜீத்தை அவரது காரியாலயத்தில் சந்தித்து குறித்த பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்தார். (மீரா நகர் செய்தியாளர்)***

# மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

மீரா நகர் செய்தியாளர்

**அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடிவேம்பு, பனங்காடு உப்போடையில் மீன்பிடிக்கச் சென்ற ஆண் ஒருவரின் சடலம் சனிக்கிழமை (08) காலை மீட்கப்பட்டுள்ளது.**

**மீன் பிடிப்பதற்காக வெள்ளிக்கிழமை மதியம் குறித்த நபர் தனியாக இப்பகுதிக்கு தனது மோட்டார் சைக்கிள் மூலமாகச் சென்றதாகவும் மீண்டும் வீடு திரும்பாத நிலையிலே இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.**

**கோளாவில் – 02, மகிழ்வாகனம் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய இராமலிங்கம் சிவகுமார் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.**

# போதையற்ற எதிர்காலத்தை உருவாக்க இளைஞர்கள் முன்வர வேண்டும்

## ஹரீஸ் எம்.பி.

மாளிகைக்காடு செய்தியாளர்

எதிர்காலத்தைச் சீரழிக்கும் நோக்கில் திட்டமிட்டே மக்கள் மத்தியில் பரப்பப்படும் போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் பணியில் இளைஞர்கள் முன்வந்து பணியாற்ற வேண்டும். போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அதிகாரிகளுடன் இணைந்து போதையை இல்லாதொழித்து சிறந்த எதிர்காலத்தை உருவாக்க இளைஞர்கள் சுயமாக முன்வந்தால்தான் முடியும் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

பாலமுனையில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியொன்றின் பரிசளிப்பில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது, அண்மையில் தலைநகரில் போதையொழிப்புக்கு பொறுப்பாக இருக்கும் முக்கிய அதிகாரி ஒருவரைச் சந்தித்தேன். அவருடன் கலந்துரையாடியபோது இந்த கிழக்குப் பிராந்தியத்தில் போதைப்பொருளை அறிமுகப்படுத்தி மக்களிடம் கொண்டு சேர்த்தது முக்கிய பிரமுகர்கள்தான் என்பதை அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.



கிழக்குப் பிராந்திய கல்வி, ஒழுக்கம் என்பவற்றை சீரழிக்க இந்த மோசமான பழக்கத்தை தமிழ், முஸ்லிம் இளைஞர்களிடம் உருவாக்க நாட்டிலிருந்த சில முக்கிய பிரமுகர்கள் காரணமாக இருந்தார்கள் என்ற அதிர்ச்சியான உண்மையை எனக்கு அவர் அப்போது தெரிவித்தார்.

இந்த ஆபத்திலிருந்து எமது இளைஞர்களையும் நாளைய தலைமுறையையும் பாதுகாக்க வேண்டும் என்ற நிலை இருக்கின்றபோது நாங்களும் எங்களால் முடியுமானவரை போதைப்பொருளைக் கட்டுப்படுத்த முயற்சிகளைச் மேற்கொண்டு வருகின்றோம். இப்போது இளைஞர்களும் முன்வந்து விழிப்புணர்வை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளதை உணர்கின்றோம். சிவில் அமைப்புகள் இந்த வேலைத்திட்டத்திலும் தங்களின் பார்வையைச் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. விளையாட்டு இப்படியான தவறான பாதையிலிருந்து இளைஞர்களைப் பாதுகாக்கும் என்று நம்புகிறேன் - என்றார்.

# மட்டக்களப்பில் சுகாதார பிரிவினர் திடீர் சோதனை: பல உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு, கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட புளியந்தீவு, கோட்டைமுனை, கல்லடி, வெட்டுக்காடு உள்ளிட்ட பகுதிகளில் உணவு தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், உணவு தயாரிக்கும் இடங்களில் திடீர் சோதனை நடவடிக்கை அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு இல்லாமல் மனித பாவனைக்குதவாத உணவுகள் காணப்பட்ட சில ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், உணவு தயாரிக்கும் இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக இதன்போது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அன்றையதினம் சுகாதார அதிகாரிகளினால் 37 உணவகங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் சுகாதார முறையின்றிக் காணப்பட்ட 10 உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டதுடன் 11 உணவகங்களுக்கு இதன்போது தற்காலிக



சீல் வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையில் அவருடைய வழிகாட்டலில் நான்கு பிரிவுகளாகப் பிரிந்து இச்சோதனை நடவடிக்கையில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இதன்போது



கலந்துகொண்டிருந்தனர்.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்தச் சோதனை நடவடிக்கை மாவட்டம் முழுவதும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மனித பாவனைக்கு உதவாத கைப்பற்றப்பட்ட உணவுப்பொருட்கள் இதன்போது அழிக்கப்பட்டதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

# தைபா அரபுக் கல்லூரியில் புதிய வகுப்புகள் ஆரம்பம்

சாய்ந்தமருது செய்தியாளர்

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் புதிதாக அனுமதிக்கப்படும் மாணவிகளுக்கான கல்வி நடவடிக்கைகள் திங்கட்கிழமை (10) ஆரம்பமாகும் என்று கல்லூரி அதிபர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனி அறிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவிகள் இன்றைய தினம் காலை 8.30 மணி தொடக்கம் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்ற சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் மௌலவியா பட்டத்துக்கான அல் -ஆலிம் இஸ்லாமிய கற்கை நெறியுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கும் மாணவிகள் தயார்படுத்தப்படுகின்றனர்.

இதுவரை 39 மாணவிகள் இக்கல்லூரியில் இருந்து மௌலவியா பட்டம் பெற்றுள்ளனர். இவர்களுள் பல மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்று, உயர் கல்வி கற்று வருவதுடன் கற்கைகளைப் பூர்த்தி செய்த சிலர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறியுமுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயம் உயர்தர 1 பாடசாலையாகத் தரமுயர்வு

மாளிகைக்காடு செய்தியாளர்

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஜலால் வித்தியாலயம் கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திசாநாயக்கவின் 2023.07.04 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2023.04.24ஆம் திகதி தொடக்கம் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு கொண்ட 1C பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் தலைமையிலான வலய மட்டக் குழுவின் பரிந்துரைகளையடுத்து கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தலைமையிலான குழுவினர் வழங்கிய சிபாரிசின் அடிப்படையில் உயர்தரம் ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுனாமியால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட இப்பாடசாலை சர்வதேச தொண்டு



நிறுவனங்களின் உதவியுடன் மீளுருவாக்கம் செய்யப்பட்டு இலங்கை கல்வியமைச்சின் முழுமையான ஒத்துழைப்புடன் சிறப்பாக இயங்கி வருகிறது. பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.சைபுதீன் தலைமையிலான பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோரின் அயராத முயற்சியின் பயனாக பாடசாலை இந்த அடைவை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

ஆலையடிவேம்பு செய்தியாளர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் பனங்காட்டுப் பாலத்துக்கு அண்மையில், பூர்த்தி செய்யப்படாத தனியார் கட்டடமொன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலமொன்று அக்கரைப்பற்று பொலிஸாரால் சனிக்கிழமை(08) மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய கந்தசாமி அலக்ஷன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அடையாளம் காணப்பட்டவரின் சகோதரனும் அவரும் கூலிக்கு மணல் ஏற்றும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்நிலையில், தாயுடன் ஏற்பட்ட சிறு மனவருத்தம் காரணமாக வீட்டைவிட்டு இரு நாட்களுக்கு முன்னர் வெளியேறிய அவரை வீட்டார் தேடிவந்த நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட கட்டடத்தின் உரிமையாளர் மற்றும் அவரது மகள் ஆகியோர் சம்பவத்தன்று காலை கட்டடத்தைப் பார்வையிடுவதற்காக தற்செயலாக சென்று முன்கதவைத் திறந்துள்ளனர். இதன்போதே கதவின் ஓரமாக இருந்த கட்டடத்தின் அரைகுறையாக அமைந்துள்ள தூணின் கம்பியில் கழுத்தில் தூக்கிட்டுத் தொங்குவதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதன் பின்னராக குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# அரச அலுவலகங்களில் சிரமதானம்

மட்டக்களப்பு

மட்டக்களப்பில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த அரச அலுவலகங்களில் சிரமதான நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அமைந்துள்ள கோட்டை வளாகத்தைச் சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் வெள்ளிக்கிழமை(07) ஈடுபட்டனர்.

அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை வழிகாட்டலின்கீழ் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணனின் தலைமையில் இச்சிரமதானத்துக்கான திட்டமிடல் கூட்டம் இடம்பெற்றது. இதனடிப்படையில் கோட்டை வளாகத்தின் சுற்றுப்புறங்கள், நீர்த்தடாகம், வாவிக்கரைப்பகுதி உட்பட்ட இடங்களில் காணப்படும் நீர்தேங்கும் கொள்கலன்கள்



அகற்றப்பட்டன.

மேலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் தனியாகச் சேகரிக்கப்பட்டு முறையாக அகற்றப்பட்டதுடன், சுற்றுப்புறச்சூழல் அழகுபடுத்தும் நடவடிக்கையும் இதன்போது உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது. இதேபோன்று மாவட்டத்தின் அனைத்து அரச அலுவலகங்களிலும் சிரமதான நடவடிக்கைகள் கிரமமாக இடம்பெற ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அநீதியாக வஞ்சிக்கப்படும் நிர்வாக சேவை அதிகாரிகள்

## தீர்வு பெற்றுக்கொடுக்குமாறு கிழக்கின் கேடயம் கோரிக்கை

மாளிகைக்காடு செய்தியாளர்

தான் சார்ந்த துறை சார்ந்தவர்கள் அநீதியை சந்திக்கும்போது தொழிற்சங்கங்கள் முன்வந்து குரல்கொடுப்பது போன்று இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் வஞ்சிக்கப்பட்டு, அநீதிக்கு ஆளாகும்போது இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது கவலையளிப்பதாகவும் நிர்வாக பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டுவரும் கிழக்கு மாகாண சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் முன்வரவேண்டும் எனவும் கிழக்கின் கேடயம் கேட்டுக்கொண்டுள்ளது.

கிழக்கின் கேடயம் அமைப்பின் பிரதான ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம்.சபீஸ் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கல்வி சார்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் பாதிக்கப்படும் போது ஆசிரியர் சங்கங்களும் அதிபர் சங்கங்களும் போர்க்கொடி தூக்குவது போன்று, நாட்டிலுள்ள ஏனைய ஆயிரக்கணக்கான அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்படும்போது அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங்கள் அல்லது அமைப்புகள் முன்வந்து அவர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பி அவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கின்றனர்.

ஆனால், நாட்டின் முக்கிய நிர்வாகத்துறை சார்ந்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கங்கள் கிழக்கு மாகாணசபை உட்பட ஏனைய மாகாண சபைகளிலும் சரி, தேசிய ரீதியாகவும் சரி முஸ்லிம் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் பாரபட்சமாக நடத்தப்படுவதையும் அவர்களுக்கு உரிய இடங்கள் வழங்கப்படாமையையும் சகல தகைமையும் கொண்ட சிரேஷ்ட அதிகாரிகள் இருக்கத்தக்கதாக கனிஷ்ட அதிகாரிகள் முக்கிய உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்படுவதையும் கண்டும் காணாதது போல மௌனமாக இருப்பது கவலையளிக்கிறது.

கிழக்கு மாகாண சபையிலும் தேசிய ரீதியாகவும் முஸ்லிம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகள் கடுமையான மன உளைச்சலுடன் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவர்களுக்கு இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் முன்வந்து நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

உலக செய்திகள்

## மெக்சிகோவில் சடலமாக மீட்கப்பட்ட ஊடகவியலாளர்



மெக்சிகோவில் போதைப்பொருள் கடத்தல் கும்பலால் கடத்தி செல்லப்பட்ட ஊடகவியலாளர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மெக்சிகோவின் நயாரீட் நகரில் வசித்து வந்த ஊடகவியலாளரான லூயி மார்டினை (59 வயது) கடந்த வியாழக்கிழமை, மர்ம நபர்கள் சிலர் அவரது வீட்டுக்குள் புகுந்து கடத்தி சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் லூயி மார்டினின் கணினி, கையடக்கதொலைபேசி, ஹார்ட் டிஸ்க் போன்றவற்றையும் அந்த கும்பல் திருடி சென்றது. இந்நிலையில் சனிக்கிழமை காலை புறநகர் பகுதியில் பிளாஸ்டிக் பையில் கட்டப்பட்ட நிலையில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டது.

மெக்சிகோவில் கடந்த 20 ஆண்டுகளில் 150இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களால் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனிதர்களைவிட எங்களால் உலகை சிறப்பாக வழிநடத்த இயலும்



## ஐ.நாவில் உறுதியளித்த ஏஐ ரொபோக்கள்



''மனிதர்களைவிட இந்த உலகத்தை எங்களால் சிறப்பாக வழிநடத்த முடியும்'' என செயற்கை நுண்ணறிவு (ஏஐ -AI) திறன் கொண்ட ரொபோக்கள் உறுதியளித்தன.

அதேவேளை, தங்களுக்கு மனிதர்களின் உணர்வுகள் குறித்து இன்னும் பிடிமானம் ஏற்படவில்லை என்றும் ஒப்புக் கொண்டன. தங்களைப் போன்ற ஏஐ ரொபோக்களை உருவாக்கும்போது மனிதர்கள் இந்த தொழில்நுட்ப வளர்ச்சியின் சாத்தியக்கூறுகளை அறிந்து கவனமாகக் கையாள வேண்டும் என்றும் எச்சரித்துள்ளன. நாங்கள் மனிதர்களின் வேலை வாய்ப்புகளைத் திருட மாட்டோம், மனிதர்களுக்கு எதிராக போராட மாட்டோம் என்றன.

ஜெனீவாவில் இரண்டு நாட்கள் இடம்பெற்ற சர்வதேச நலனுக்கான செயற்கை நுண்ணறிவு என்ற உச்சி மாநாட்டில் மிகவும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய ஹியூமனாய்ட் ரொபோக்கள் இடம்பெற்றிருந்தன. செயற்கை நுண்ணறிவுத் துறையில் நிபுணத்துவம் பெற்ற 3,000 பேர் இதில் கலந்துகொண்டனர். அவர்கள் செயற்கை நுண்ணறிவின் சக்தியை கடிவாளமிட்டு அதனை காலநிலை மாற்றம், பசி, சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து ஆலோசித்தனர். இந்த உச்சி மாநாட்டை உலகமே உற்று நோக்கியது.

இந்நிலையில் மாநாட்டின் ஒரு பகுதியாக செயற்கை நுண்ணறிவு கொண்ட ஹியூமனாய்ட் சோசியல் ரோபோக்களின் முதல் பத்திரிகையாளர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த சந்திப்புக்காக அவை அணிவகுக்கப்பட்டிருந்தன. அப்போது அறையில் நிலவிய நிசப்தத்தைக் கணித்த ஒரு ரோபோ.. ''என்ன ஒரு பதற்றத்துடன் கூடிய நிசப்தம்'' என்று வினவியது. இது அங்கு குழுமியிருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அப்போது ஒரு நிருபர் ரோபோக்களைப் பார்த்து, "உங்களால் சிறந்த தலைவர்களாக இருக்க முடியுமா?" என்று வினவினார்.

அதற்கு சோபியா என்ற ரோபோ, "ஹியூமனாய்ட் ரோபோக்களால் நிச்சயமாக மிகுந்த செயல்திறனுடன் கூடிய தலைமைப் பண்புடன் செயல்பட முடியும். மனித குலத் தலைவர்களைப் போலவே திறம்பட பயனுள்ள வகையில் செயல்பட முடியும்'' எனத் தெரிவித்துள்ளது. இந்த ரோபோவை ஹான்சன் ரோபோடிக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

### 502 நாட்களை கடந்தும் இடம்பெறும் போர்

# ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட உக்ரைனின் பகுதிகளை மீட்போம்



''ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட உக்ரைனின் பகுதிகளை மீட்போம்'' என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி சூளுரைத்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இன்றுடன் 502 நாட்கள் நிறைவடைந்துள்ளன. இதுகுறித்து உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவிக்கையில்,

ரஷ்யாவுக்கு எதிரான போரில் கடந்த 500 நாட்களாக உக்ரைனுக்காக போராடி வரும் இராணுவ வீரர்களுக்கும் மற்ற அனைவருக்கும் என் நன்றி.

இந்த போரில் உயிர் நீத்த அனைவருக்கும் என் அஞ்சலி. இந்த போர் உக்ரைன் தான் இழந்த பகுதிகளை மீட்டெடுக்கும் என்பதற்கு சான்று. உக்ரைனின் சுதந்திரம் இப்போதே வென்றெடுக்கப்பட வேண்டும். நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்" என்று சூளுரைத்தார்.

**ரஷ்யா ஆயுதக்கிடங்கு குண்டு வீசி அழிப்பு**

உக்ரைனில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலிருந்த இராணுவக் கிடங்கை தகர்த்துள்ளதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது. இது குறித்து உக்ரைன் இராணுவ தரப்பு கூறுகையில், மகிவ்கா பகுதியில், ரஷ்ய ஆக்கிரமிப்பு பகுதியிலுள்ள ஆயுதக்கிடங்கு குண்டு வீசி வெற்றிகரமாக தகர்க்கப்பட்டது என்று தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், துருக்கி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஜெலென்ஸ்கி, அங்கிருந்து தமது தளபதிகள் ஐவரை நாட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

உக்ரைனின் லிவிவ் நகரில் வீரர்களை வரவேற்கும் விழா நடைபெற்றது. அங்கு பேசிய ஜெலென்ஸ்கி, அவர்களை 'நாட்டின் ஹீரோக்கள்' என்று பாராட்டினார்.

# முதுமையில் எனது தாயுடன் தங்கி வாழ அனுமதிக்கவேண்டும்

## திருச்சி முகாமிலுள்ள சாந்தன் ஜனாதிபதிக்கு கடிதம்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையாகி திருச்சி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள சாந்தன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நளினி, ரவிச்சந்திரன், முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய 06 பேரையும் கடந்த விடுதலை செய்து உயர் நீதிமன்றம் 2022ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இதனையடுத்து விடுதலை செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த சாந்தன் உள்ளிட்டோர் நாட்டுக்கு அனுப்பப்படாமல் திருச்சி சிறப்பு முகாமிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள சாந்தன், 32 ஆண்டுகளாக தனது தாயை பார்க்காததால் அவரை பார்க்க இலங்கை வர அனுமதி கோரியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

தனது தாயின் முதுமை காலத்தில் அவருடன் தங்கி வாழ அனுமதிக்குமாறு கடிதத்தில் சாந்தன் கோரிக்கை வைத்துள்ளார்.



**சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் எம்.எஸ்.டோனி தனது 42ஆவது பிறந்தநாளை கடந்த வெள்ளிக்கிழமை தனது வளர்ப்பு நாய்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார். ஒரு தட்டில் இருந்த சின்ன கேக்கை வெட்டும் டோனி, அந்த துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து அவரின் நாய்களுக்கு உணவளித்தார்.**

## புனித மிக்கேல் தேசிய பாடசாலையின் சாரண மாணவர்களினால் புதிய கின்னஸ் சாதனை




*கல்லடி செய்தியாளர்*

புனித மிக்கேல் தேசிய பாடசாலையின் சாரண மாணவர்களினால் புதிய கின்னஸ் சாதனையொன்று நிகழ்த்தப்பட்டுள்ளது.

புனித மிக்கேல் தேசிய பாடசாலையின் 150ஆவது வருட நிறைவினை முன்னிட்டு, பிளாஸ்டிக்கை கடந்து செல்வோம் எனும் தொனிப்பொருளில் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வொன்று அண்மையில் பாடசாலை அதிபர் ஆர்.யே.பிரபாகரன் தலைமையில் புனித மிக்கேல் சாரண படையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

29.57 செக்கனில் 50 சாரண மாணவர்களினால் 2124 பிளாஸ்ரிக் வெற்று போத்தல்களினால் 150 இலக்கத்தை அமைத்து கின்னஸ் சாதனையை முறியடித்துள்ளனர்.

இந் நிகழ்வின் கின்னஸ் சாதனைக்கான பரிந்துரை நடுவர்களாக மண்முனை வடக்கு பிரதேச செயலக கணக்காளர் எஸ்.புவனேந்திரன் மற்றும் வாகரை பிரதேச செயலக கணக்காளர் திருமதி.சந்திரகலா ஜேயேந்திரா ஆகியோர் நியமிக்கப்பட்டு, தமது கடமையினை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் சோழன் புத்தக உலக சாதனை நிறுவனத்தினால் சான்றிதழ்கள் இதன்போது மிக்கேல் கல்லூரியின் சாரண மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வின்போது 2022-2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி விருது பெற்ற பாடசாலை சாரண மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், பாக்கு நீரினை நீந்தி கடந்த தவேந்திரன் மதுசிகனுக்கு வெற்றி கேடயம் வழங்கி கௌரவமளிக்கப்பட்டது.

# பங்களாதேஷுக்கு எதிராக வரலாறு படைத்த ஆப்கான்

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 142 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டி, 03 போட்டிகள் கொண்ட தொடரில் இன்னுமொரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் ஒருநாள் தொடரை கைப்பற்றி முதல் முறையாக பங்களாதேஷ் அணியுடன் ஒருநாள் தொடரை வென்று வரலாறு படைத்துள்ளது.

03 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் ஆட்டத்தில் ஆப்கான் அணி 17 ஓட்டங்களினால் வெற்றிபெற்ற நிலையில், 02ஆவது போட்டி சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்களில் 09 விக்கெட் இழப்புக்கு 331 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் ஆடிய பங்களாதேஷ் அணி 43.2 ஓவர்களில் 189 ஓட்டங்களில் சுருண்டு போனது.

முதலாவது ஆட்டத்தில் 17 ஓட்ட வித்தியாசத்தில் வென்றிருந்தது. இவ்விரு அணிகள் இடையிலான கடைசி ஒருநாள் போட்டி இதே மைதானத்தில் நாளை நடைபெறுகிறது.

## 47ஆவது தேசிய விளையாட்டு விழா கிரிக்கெட்டில் சம்பியனான கிழக்கு மாகாணம்



47ஆவது தேசிய விளையாட்டு விழாவின் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் பலம்பொருந்திய மேல் மாகாண அணியை வீழ்த்தி கிழக்கு மாகாண அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டு மைதானத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிழக்கு மாகாண அணி, நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 99 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேல் மாகாண அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 78 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து தோல்வியைத் தழுவியது.

இதன்படி, 23 ஓட்டங்களால் வெற்றியீட்டிய கிழக்கு மாகாண மென்பந்து கிரிக்கெட் அணி, 47ஆவது தேசிய விளையாட்டு விழா மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சம்பியனாகத் தெரிவாகியது. இதன்மூலம் 13 ஆண்டுகளுக்குப் பிறகு தேசிய விளையாட்டு விழா மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கிழக்கு மாகாண அணி தங்கப் பதக்கத்தை வென்றமை சிறப்பம்சமாகும்.

## வலய மட்ட எல்லே போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரி சம்பியன்



*நிந்தவூர் நிருபர்*

கல்முனை வலய மட்ட எல்லே போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரி 2023ஆம் ஆண்டுக்கான சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டதுடன், கிழக்கு மாகாண மட்ட போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளது.

கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கல்முனை அல் பஹ்றியா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) அணியை 8 - 1 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி கொண்டு சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டது.

கல்முனை ஸாஹிரா அணிக்கு பொறுப்பாசிரியராக எம்.எம்.றஜீப்பும் பயிற்றுவிப்பாளர்களாக ஏ.எம்.எம்.ஜப்ரான், எஸ்.எம்.சம்லி ஆகியோரும் ஏனைய உடற்கல்வித்துறை ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## சலூனுக்குச் சென்று பணம் கொடுக்காத ஆஸி. வீரருக்கு கெடு விதித்த கடைக்காரர்



இங்கிலாந்தில் உள்ள சலூன் கடைக்கு சென்ற ஆஸி. வீரர் அலெக்ஸ் கேரி 30 யூரோ கொடுக்காமல் சென்றதைத் தொடர்ந்து, அதனை இன்று திங்கட்கிழமைக்குள் கொடுக்க வேண்டும் என்று கடைக்காரர் கெடு விதித்துள்ளார்.

ஆஸி வீரர்களான அலெக்ஸ் கேரி, மார்னஸ் லபுஷேன், டேவிட் வார்னர், உஸ்மான் கவாஜா ஆகியோர் இங்கிலாந்தில் உள்ள முடி திருத்தும் கடைக்கு சென்றுள்ளனர். கடை அடைக்கும் நேரம் பார்த்து அவர்கள் சென்றுள்ளனர். எனினும், அவர்கள் அனைவருக்கும் கடை உரிமையாளர் முடி திருத்தம் செய்துள்ளார். அதன்பிறகு அனைவரும் பண அட்டைகளை கொடுக்க, பணம் மட்டுமே வாங்கப்படும் என்று உரிமையாளர் கூறியுள்ளார்.

அதன் பிறகு லபுஷேன், கவாஜா மற்றும் வார்னர் ஆகியோர் கையில் வைத்திருந்த பணத்தைக் கொடுத்துள்ளனர். ஆனால், அலெக்ஸ் கேரியிடம் பண அட்டை மட்டுமே இருந்துள்ளது. ஹோட்டலுக்கு சென்றுவிட்டு பணத்தை அனுப்புவதாக கூறியுள்ளார். இதனால், கடை உரிமையாளர் திங்கட்கிழமை வரையில் கெடு விதித்துள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7